Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 08 | 24-07-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 156

### தோலகட்டி நெல்லிரசம் தயாரிப்பு மீண்டும் ஆரம்பம்

தோலகட்டி ஸ்தாபனத்தினால் தயாரிக்கப்படும் நெல்லிரச தயாரிப்பிற்கு தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளதாக தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது இதன் தயாரிப்பினை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் தர நிர்ணய ஒழுங்கு விதிகளின்படி தோலகட்டி ஸ்தாபனம் செயற்படும் எனவும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

## சிறிலங்கா அரசிற்கு பிரிட்டிஷ் அரசு செய்துவரும்

# ஆயுத விநியோகத்தை நிறுத்துமாறு

# லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

### பிரதிப் பிரதமர் பதவி

(கொழும்பு)

அடுத்த பாராளுமன்றத்தில் பிரதிப்பிரதமர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு அப்பதவி சுழற்சி முறையில் சிறுபான்மை இனப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது.

இதுகாலவரையிலான சிறிலங்காப் பாராளுமன்றம் எதிலும் பிரதிப்பிரதமர் என்ற பதவி வகுக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் லண்டன் கிளை ஏற்பாடு

[லண்டன்]

**சிறிலங்கா அரசிற்கான ஆயுத விநியோகத்தை நிறுத்துவதோடு, பொருளாதார உதவிகள் வழங்குவதையும் நிறுத்துமாறு கோரி நேற்று நண்பகல் லண்டனில் தமிழர்கள் பெநும ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவ் ஊர்வலத்தினை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லண்டன் கிளை ஏற்பாடு செய்திருந்தது.**

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தை நினைவு கூரும் முகமாக இவ் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டதாக பி பி ஸி யின் சிங்கள சேவையான சந்தேசிய தெரிவித்தது

தமிழ் மக்களின் பிரதேசத்தின் மீது பிரகடனப்படுத்தியுள்ள பொருளாதாரத்தடையையும் உடனடியாக நீக்க வேண்டும் என சிறிலங்கா அரசாங்கத்தைக் கோரவேண்டும் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்கோஷம் எழுப்பினர்

இவ் ஊர்வலத்தை ''கறுப்பு யூலை'' தினத்தைமுன்னிட்டு விடுதலைப்புலிகளின்லண்டன் கிளை ஏற்பாடு செய்ததாகக் கூறிய பி பி ஸி, இவ் ஊர்வலத்தில், கணிசமான பெண்களும், குழந்தைகளும் கலந்து கொண்டதாகத் தெரிவித்தது

## மதில் சரிந்து ஒருவர் பலி

(மாத்தறை)

தெவிநுவர விஷ்ணு தேவாலயபெரஹராவை கண்டு களிக்கக் கூடியிருந்த மக்கள் மீது மதிலொன்று இடிந்து வீழ்ந்ததால் ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளார். 45 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனும

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் நிலை உலகிற்கு உணர்த்தவே ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தோம்

### புலிகளின் லண்டன் கிளை பேச்சாளர்

(லண்டன்)

வதே எமது நோக்கம் என

த்தை தெரிவித்துள்ளார்.

## பிரபாகரனின் தந்திரோபாயம் சரி என்பதை எவரும் உணர்வர்

### லெப். செல்லக்கிளி நினைவுரையில் அப்பையா அண்ணை

(யாழ்ப்பாணம்)

''நீங்கள் எமது தேசியத் தலைவரை நம்புங்கள் நான் அவரைப்பற்றி ஆரம்பகாலத்தில் இருந்தே அறிந்திருக்கிறேன் அவரது தந்திரோபாயங்களைப் பற்றி இன்று குறை கூறுபவர்கள் கூட சிறிது காலத்துக்குப்பின்னர் அந்த தந்திரோபாயங்கள் சரியானவை என்பதை உணர்வார்கள்''

இவ்வாறு திருநெல்வேலி வாலை அம்மன் சனசமூக நிலைய முன்றலில் நேற்று மாலை நடைபெற்ற லெப். செல்லக்கிளி அம்மானின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு. அப்பையா அண்ணை தெரிவித்தார்.

வலிகாமம் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி பைரவி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது 1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலுக்கு செல்லக்கிளியே தலைமைதாங்கி அந்தத்தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தினார் செல்லக்கிளி போன்ற வீரர்கள் இன்றும் இருந்தால் எமது போராட்டத்தில் நாம் எவ்வளவோ முன்னேறியிருப்போம்என்றும்தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி, விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு தேவர், மற்றும் கடற்புலிகள் அரசியற் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு வாஞ்சிநாதன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர் அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து கலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் பற்றாக்குறை

(லண்டன்)

தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள் என்றும், அவர்களுக்குத் தேவைப்படுவது சுதந்திரமும், ஜனநாயக உரிமையை முழுமையாகப் பெற்றதுமான ஒரு வாழ்க்கையே இதனை உலகிற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் உணர்த்துவதே எமது நோக்கம் என விடுதலைப் புலிகளின் லண்டன் கிளைப் பேச்சாளர் அன்ரன் ராஜா தெரிவித்தார்.

நேற்று லண்டன் நகரில் நடைபெற்ற 'கறுப்பு ஜூலை' ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

இதனை சிறிலங்கா அரசாங்கம் உட்பட உலகில் உள்ள சகல நாடுகளும் மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என வேண்டுகோள்விடுத்தார்

(6ஆம் பக்கம் பார்க்க)

ண்டு உரை நிகழ்த்திய விடு

## க.பொ.த. உயர்தர பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சுமார் ஒரு லட்சத்து நாற்பத்தி எட்டாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் சுமார் ஆயிரத்து முப்பது பரீட்சை நிலையங்களில் நடைபெற இருக்கின்ற இப்பரீட்சை இரண்டு பிரிவுகளாக நடைபெற இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமகாலத்தில் பரீட்சையை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீக்க நடவடிக்கை

வடக்கு-கிழக்குப் பகுதியில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 8 மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றவென 296 பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட ஆசிரியர்களுக்கான நியமனப் பத்திரம் அண்மையில் வழங்கப்பட்டது.

# அமைச்சர் ஜோன் அமரதுங்க கடிதம் தேர்தல் சட்டத்திற்கு விரோதமானது

(கொழும்பு)

சகல கிராமசேவையாளர்களையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்குமாறு உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை அமைச்சர் ஜோன் அமரதுங்க கடிதம் அனுப்பி வைத்தமை தேர்தல் சட்டத்திற்கு விரோதமானது என்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகத் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபை அமைச்சர் கடந்த வாரம், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என சகல கிராமசேவையாளர்களுக்கும் தன் கைப்பட ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்தை பத்திரிகையாளர் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளரிடம்சமர்ப்பித்தபோதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

தேர்தல் ஒழுங்கீனங்கள் தொடர்பாகவிசாரணைக்குழு அமைக்கப்பட்டால் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் இக்கடிதத்தை அக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறும், இது தொடர்பாககட்சியின் பொதுச்செயலாளர் ஊடாக அமைச்சரிடம் விளக்கம் கோரப்படும் எனவும் அவர் கூறினார்.

## கிராமசேவகர்கள் மத்தியில் காமினி தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில்உள்ள சகல கிராமசேவையாளர்களையும் அழைத்து, பொதுத் தேர்தலின் போது தனக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அமைச்சர் காமினிதிசாநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று மாலை கண்டி பௌத்த மத்திய நிலையத்தில் கிராமசேவையாளர்களை அவர் சந்தித்த போது மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்து தெரிவிக்கையில், பொதுத் தேர்தலின் போது தனக்கும் கட்சிக்கும் சகல கிராமசேவையாளர்களும் வாக்களிக்க வேண்டும் என்றும் இதே வேளை தமது பகுதி கட்சிக் காரியாலயங்கள் ஊடாக மேலும் அதிகளவு வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார் என தெரியவருகின்றது.

## 'மக்களின்குரல்'நிகழ்ச்சியை தடைசெய்ய இணக்கம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பி வரும் மக்களின் குரல் நிகழ்ச்சிகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் கொள்கையளவில் இணங்கியுள்ளார்

இவ் ஒலிபரப்பு ஈ.பி.டி.பியினரால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வருவதாக எதிர்க்கட்சியினர்புகார் செய்திருந்தனர்.

இப்புகாரைப் பரிசீலித்த தேர்தல் ஆணையாளர், தேர்தல்முடியும்வரை இவ் ஒலிபரப்பை தற்காலிமாக நிறுத்தி வைக்க கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## இழுவைப் பெட்டி உற்பத்தி; அனுமதி பெறப் பணிப்பு

உழவு இயந்திரம், இரு சக்கர உழவு இயந்திரம் என்பவற்றின் இழுவைப் பெட்டிகளை உற்பத்தி செய்பவர்கள் 25-07-94 நாளை தொடக்கம் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் உற்பத்தி செய்வதற்கான அனுமதி பெற்ற பின்னரே உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், அனுமதி இன்றி உற்பத்தி செய்பவர்கள்மீது தமிழீழ காவல்துறையினரும் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர் எனவும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தோல்வியை தவிர்க்க முடியாது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்களாதரவு, வீழ்ச்சியுற்றதை கருத்துக் கணிப்புக்கள் காட்டுவதனால், ஐ.தே.கவின் தோல்வி தவிர்க்க முடியாததாகி வருவதாக ஜனா

(6ஆம் பக்கம் பார்க்க)

# விவசாயிகளுக்கு வழங்கிய கடனை வசூலிக்காது விடுவது சாத்தியமற்றது

## திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களை காலாவதியாக விட்டுவிடுவது என்பது நடைமுறைக்குச் சாத்தியப்படாத ஒன்று. இதனால் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை அரசாங்கத்தினால் சமாளிக்க முடியாது என திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் 27 கோடி ரூபா,விவசாயிகளுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளதாகவும் வழங்கப்பட்ட இவ்வளவு பெரிய தொகை பணத்தை வசூலிக்காமல் விட்டுவிடுவதன் மூலம் அரசாங்கம் மேலதிக நிதிப் பற்றாக்குறை சுமையை சுமக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்க வங்கிகள் மூலம் பாரிய முத

(6ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணிக்கு வாக்களிக்கக்கூடாது தேசிய புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய இரகசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிலர் வீடு வீடாகச் சென்று நடைபெறும் பொதுத் தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும், மீறி வாக்களித்தால் உயிருக்கும் உடமைக்கும் கேடு வரும் என மிரட்டி வருவதாகவும் முன்னாள் கம்பஹா மாவட்ட உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளைபொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

சீதுவ தேர்தல் தொகுதியில் பல வீடுகளுக்கு தேசிய புலனாய்வுத் துறையினர், குடும்பத் தலைவர்களை அழைத்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## வதந்தியால் நேற்றிரவு யாழ். நகரில் பரபரப்பு

(வேலணை)

நேற்று இரவு யாழ் கொட்டடி நாவாந்துறை பகுதியில் நிலவிய வதந்தி ஒன்றினை அடுத்து இப்பகுதியில் உள்ள மக்கள் மிகவும் அவசர அவசரமாக கையில் அகப்பட்ட மூட்டைமுடிச்சுக்களுடன் குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர்

இப்பகுதியில் உலங்கு வானூர்தி மூலம் இராணுவத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

19-07-94 அன்று எழுது மட்டுவாளிற்கும் மிருசுவிலிற்கும் இடையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் எழிலமுகன் என்பவருடைய முக்கியமான புத்தகங்கள் அடங்கிய Bag [பை] தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பொ. இராஜேஸ்வரன், ஆசிரிய பீடம் ஈழநாதம் முகவரியில் தொடர்பு கொள்ளவும்;

(சி-9969)

### தவறிவிட்டது

15-7-94 அன்று மட்டுவிலில் இருந்து யாழ் - செல்லும் வழியில், சிங்கர் கத்திரிக்கோல் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், யாழ். ஆஸ்பத்திரி முன்பாக உள்ள கௌரி தொழிலகத்திலோ அல்லது -உஷா கம்புனியிலோ - சிங்கர் கம்பனி சாவகச்சேரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும்

(சி-9957)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து உடன் கண்ணாடிவழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8864)

### புலமைப் பரிசில் பரீட்சை

எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் துரித மீட்டற் பயிற்சியையும் ஞாயிறு தோறும் வெளியிடப்படும் வினாத் தாள்களையும் செய்து பயன் பெறுங்கள். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி நிச்சயம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8913)

### தேவை

ஐரோப்பா நாடு ஒன்றில் நிரந்தர வசிப்பிடம் கொண்ட விடுமுறையில் வருகை தந்துள்ள 34 வயதுடைய 8ல் நட்பு பெற்ற செவ்வாயில் 8 பாவம் உடையவருக்கு மணமகள் தேவை. 28 வயதுக்கு உட்பட்டவராகவும் இந்து சமயத்தை சேர்ந்தவராகவும் இருப்பது நன்று. தொடர்பு வி. இல - 340 மே/பா ஈழநாதம் யாழ்ப்பாணம்

(8914)

### விற்பனைக்குண்டு

அலுஸ்ரேசன் நாய்க்குட்டி (இரண்டு மாதம்) விற்பனைக்குண்டு தொடர்பு - விவி 125,


# சேவை மூப்பு அடிப்படையில் பதவிஉயர்வு தேவை

## மாநாட்டில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில்கடமையாற்றும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சேவைமூப்பு அடிப்படையில் பதவிஉயர்வு வழங்கப்படவேண்டும். இவ்வாறு மட்டக்களப்பில் நடைபெற்ற ஐக்கிய கிராம உத்தியோகஸ்தர் சங்க வருடாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் ஆசிரியர்களுக்கு சம்பள மீளாய்வு செய்யப்படுவது போன்று தினசரி 24 மணி நேரமும் சேவையாற்றும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமெனவும், பிரயாணப்படியை 150 ரூபாவிலிருந்து 800 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும், கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கான விசேட கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமெனவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# கமக்காரர் அறிமுக அட்டை மன்னாரில்வழங்கப்படுகிறது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகள் கிடைப்பதை ஒழுங்குபடுத்தவும் விவசாயம் தொடர்பான நிறுவனங்களில் சேவைகளை ஒன்றிணைக்கவும் வட தமிழீழம் முழுவதும் கமக்காரர் அறிமுகஅட்டை வழங்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே இத்திட்டம் மன்னார் மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றது மன்னார் மாவட்டத்தில் இவ் அறிமுக அட்டை பெறுவதற்காக இதுவரை 4000 க்கு மேற்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்துள்ளனர்

மன்னார் நானாட்டான் ஆகிய வட்டங்களில் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு காணிப் படங்கள் வரையப்பட்டுதகவல்பெறும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன கூடிய விரைவில் இவர்களுக்கு அறிமுக அட்டை வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமியபணிகளின்மூலம் அரசியல் லாபம் தேடேன்

## சபாநாயகர் முகம்மது

(கொழும்பு)

நான் ஒரு அரசியல் வாதி தான். ஆனால் ஒரு போதும் எனது மதத்தை அரசியல் நலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள மாட்டேன். நான் செய்யும் இஸ்லாமியப் பணிகளின் மூலம் அரசியல் இலாபம் தேட முனைய மாட்டேன். கடந்த கால அரசியல் நிலைமைகளை எமது முஸ்லிம் சமூகம் நன்கு உணர வேண்டும். இவ்வாறு முன்னாள் சபாநாயகர் எம்.எச். முகம்மது தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், சில சக்திகள் சிறுபான்மை சமூகமான முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி தேவையற்ற விதத்தில் நடந்து கொள் மக்கள் மத்தியில் நஞ்சு கலந்த பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இதனை நாம் அனுமதிக்க முடியாது. கம்யூனிஸ, மார்க்சிஸ கோட்பாடுகளை கொண்டவர்களின் ஆதரவுடன் சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வர முனைகிறது.

சில காலத்துக்கு முன்பு நானும் அமைச்சர் ஹமீதும் சிங்களக் கட்சிகள் மூலம் பதவிக்கு வந்தவர்கள் என்றும், எங்களால் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்றும், சிலர் கூறித்திரிந்தனர். இன்று அவர்களின் நிலை என்ன? இஸ்லாத்துக்கேமுரணானகம்யூனிஸ போக்காளர்களுடன் இணைந்துள்ளனர் கம்யூனிஸ கொள்கை உடையவர்களின் ஆட்சியில் மத சுதந்

# இராணுவத்தீர்வுகாண்பதில் ஐ.தே.கவுக்கு அதிகநாட்டம்

## - பாமிஸ் இயக்க தலைவர்

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டாலேயே அனைவரும் நிம்மதியாக வாழும் நிலை உருவாகும். ஆனால் ஐ.தே.கவோ பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைக்காமல் இராணுவத்தீர்வில் கவனம் கொண்டுள்ளது. இது சிறுபான்மையினரை தொடர்ந்தும் ஏமாற்றும் ஒரு செயலாகும். இவ்வாறு பிரபல சட்டத்தரணியும், பாமிஸ் இயக்கத் தலைவரும், பொது ஜன முன்னணி தேசியப் பட்டியல் வேட்பாளருமான அல்ஹாஜ் எம்.எம். ஸுஹைர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்கள் நிம்மதியாகவும், சமாதானமாகவும் வாழும் வழிமுறைகளைக் காண்பதில் ஐ.தே க தவறிவிட்டது.

1988 ம் ஆண்டில் ஐ.தே.க வெளியிட்ட தேர்தல் பிரகடனத்தில் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. யுத்தத்தை நிறுத்தவும், வன்செயல்களுக்கு முடிவு கட்டவும் நடவடிக்கை எடுப்பது பற்றி அதில் பேசப்பட்டு இருந்தது ஆனால் இனப் பிரச்சினையை தீர்க்கும் பொறுப்பை ஐ.தே.க முழுமையாக ஏற்காமல் வட்டமேசை மாநாடு, தெரிவுக்குழு ஆகியவற்றை இழுத்து பொறுப்பு தட்டிக்கழிக்கப்பட்டது. யுத்தத்தில் ஈடுபடும் படையினருக்கான தனிச் சலுகை பற்றிய அறிவிப்பு யுத்தத்தை தொடரும் ஐ.தே.க வின் எண்ணத்தையே எடுத்துக்காட்டுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

## லயன்ஸ் கழக மகாநாடு

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரின் வருடாந்த மகாநாடும் மதியபோசன விருந்தும் இன்று 24-7-94 முற்பகல் 10-30 மணியளவில் மூளாயில் உள்ள ஆர்-ரி-ஆர் இல்லத்தில் கழகத்தலைவர் ஆர். ரி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளன

லயன் எஸ்.இராசரத்தினம் அவர்களும் பாரியார் லயன் லேடி திருமதி ரஞ்ஜினி இராசரத்தினம் அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ் வைபவத்தில் 1994-1995 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளது.

## தங்கக் கடத்தல் முறியடிப்பு

பெட்டி ஒன்றுக்குள் மறைத்து வைத்தபடி கடத்திவரப்பட்ட 75 லட்சம் ரூபா பெறுமதியான 12 கிலோ எடையுள்ள தங்கக் கட்டிகள் சுங்கப் பகுதியினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டன.

இப் பெட்டிகள் துபாயிலிருந்து அனுப்பப்பட்டிருந்தன இவை சுங்கப் பகுதியின் களஞ்சிய சாலையில் கடந்த இரு மாதங்களாக தேங்கியிருந்த போதும் எவரும் உரிமை கோரியிருக்கவில்லை. போலி

## மாவீரர் நினைவு நிகழ்ச்சிகள்

தமிழீழ விடுதலைப்போரில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்கள் வரிசையில் புத்தூர் கிழக்கு தாமு - கந்தையா [புத்தூர் மாமா] உட்பட 16 மாவீரர்களையும் நினைவு கூரும் வகையில் புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் நினைவஞ்சலிக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நாளை திங்கட்கிழமை புத்தூர் ஸ்ரீ. வி. வி. கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு நினைவஞ்சலி உரை நிகழ்த்துவர்.

## வைர விழாவுக்கு ஏற்பாடு

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய 'வைரவிழா' வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவுக்கான ஆரம்ப நிகழ்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விழாவை முன்னிட்டு இப் பாடசாலையின் வரலாறு தயாரிக்கப்பட்டு வருவதோடு ''வைரவிழா மலர்'' ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இப் பாடசாலையில் அதிபராகவும் ஆசிரியர்களாகவும் கடமை புரிந்த இளைப்பாறிய அதிபர் திரு கி. துரைசுவாமி,

## நினைவு கூருகின்றோம்...

### 24-07-1994...

1983-ம் ஆண்டு இதேதினத்தில் மானிப்பாயில் பேருந்தை வழிமறித்த சிறிலங்கா ராணுவத்தினரால் கீழே இறக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டவரான 'மனிதன்' பத்திரிகை ஆசிரியர் மற்றும் இதேசம்பவத்தின்போது படுகொலை செய்யப்பட்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் உட்பட பல தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர். சங்கானையைச் சேர்ந்த தமிழிளைஞன் உட்பட பல தமிழர்கள்.

1986-ம் ஆண்டு மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

★ **மாயா** ( - மாயக்கிருஷ்ணன் - கோரக்கண்டல், துணுக்காய் - முல்லைத்தீவு)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் எமைப் பிரிந்த,

**புதியவன்** (கிங்ஸ்லி ராஜசூரியர் - சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில் - மன்னார்)

1988-ம் ஆண்டு அச்சுவேலிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**கணேஸ்-றிச்சாட்** (கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி- நாவற்காடு, அச்சுவேலி தெற்கு-யாழ்)

1989-ம் ஆண்டு ஆனைக்கோட்டை-உயரப்புலம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**ரங்கராஜன் கிரிதரன்** (ஆனைக்கோட்டை)

1990-ம் ஆண்டு கிளிபரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**மிரேஸ்** (சோமசுந்தரம் பரமேஸ்வரன்-வெருகல்-முட்டுச்சேனை)

**ரதீஸ்** (சி. ஜெகநாதன்-)

**சிங்கன்** (சண்முகராசா சுரேஸ்குமார் - பொற்பதி வீதி-கொக்குவில் - யாழ்)

அம்பாறை-கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன பொத்துவிலைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து அப்பகுதியைநோக்கி முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நந்தன்** (சின்னத்துரை ஜீவானந்தன்- மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-யாழ்)

**குரு-பாபு** (வாமதேவன் விக்கினேஸ்வரன்-தங்கவோடை, காரைநகர்-யாழ்)

**சுருளி** (சிவகுரு சண்முகராசா - மயிலிட்டி வடக்கு-யாழ்)

**டயஸ்** (நாகமுத்து சிறிசங்கர்-அச்செழு, நீர்வேலி-யாழ்)

**வினித்தா** (இலங்கேஸ்வரி தியாகராசா-புலோலி தெற்கு-பருத்தித்துறை)

**தவச்செல்வி** (சித்திராஞ்சலி இராமநாதன்-கேடில்ஸ் நகர், தெற்பலி-மிருசுவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

அலுஸ்ரேசன் நாயக்குட்டி (இரண்டு மாதம்) விற்பனைக்குண்டு தொடர்பு - விஜி 125, ஐயநார் கோவில் வீதி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8860)

## ஒப்படைக்கவும்

வள்ளத்தால் ஏறும் போது உங்கள் கையில் தந்த சூட்கேசை தயவுசெய்து கொண்டு வந்து தரவும் அல்லது அதற்குள் இருக்கும் பிரதான கடிதத்தையாவது அனுப்பிவைக்கவும். தொடர்பு - க.ஞானசக்தி NO- 6 ஞானபண்டிதர் வீதி, கொக்குவில் சந்தி- (8919)

## 'சைவநீதிக் கதைகள்' நூல் அறிமுக விழா

ஞானசிரோன்மணி, வித்துவான், சைவப்புலவர்மணி, திரு. வ. செல்லையா அவர்களின் நூல் அறிமுக விழா, இன்று காலை 9- 30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் திரு. சி இராமதிலகம் தலைமையில் நடைபெறும். (8908)

## எரு விற்பனைக்கு

எமதுசங்சத்தில் எரு விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு தங்கள் கூறுவிலைகளை 30.07.94ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலிகிழக்கு, கோப்பாய். (சி-992ஃ)

## தவறிவிட்டது

கோப்பாய் காவல் பணிமனைக்கும் நீர்வேலிச்சந்திக்கும் இடையில் டயறி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதில் உள்ள விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில்ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8923)

---

சமூகமான முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி தேவையற்ற விதத்தில் நடந்து கொள்கின்றன. இனவாத பத்திரிகைகள் சில பெரும்பான்மை இணைந்துள்ளனர் கம்யூனிஸ கொள்கை உடையவர்களின் ஆட்சியில் மத சுதந்திரம் இருக்குமா? எனவும் கேள்வி எழுப்பினார்.

# மாற்றம் வேண்டுமென்பது மக்களின் அறியாமையாகும்

**- அமைச்சர் ஹமீத்**

(கொழும்பு)

இந்த ஆட்சி மாற்றும் செய்யப்பட வேண்டும் என்று எவராவது கருதினால் அது அவர்களது அறியாமையே ஆகும் பொருளாதார ஸ்திரத்துவம் இல்லாத ஒரு ஆட்சி இருந்தால் அங்கே மாற்றம் வேண்டும் அரசு தவறான வழியில் பயணம் செய்வதாக இருந்தால் அங்கே மாற்றம் வேண்டும் அவ்வாறு இல்லாத நிலையில் ஏன் மாற்றம் செய்ய வேண்டும் இப்படி அமைச்சர் ஹமீத் கேள்வி எழுப்பினார்.

அக்குறணை நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இன்றைய அரசாங்கத்தின் ஆட்சி சரியானது- வழி சரியானது என்பதை எதிர்க்கட்சிகளும் ஒப்புக்கொள்கின்றன கொள்கை பிழை இல்லை எனவும் கூறுகின்றனர் நாங்கள் ஆட்சிக்கு வந்தாலும் இதே பொருளாதாரக் கொள்கையையே கடைப்பிடிப்போம் எனவும் கூறுகின்றனர் அப்படி என்றால் ஏன் ஆட்சிமாறவேண்டும் 1948-ம் ஆண்டு முதல் இடையில் ஓரிரு வருடங்கள் தவிர காங்கிரஸ் கட்சியே இந்தியாவில் ஆட்சி புரிகிறது 1979 முதல் இங்கிலாந்தில் கன்சர்வேட்டிவ் கட்சியே ஆட்சி செய்கிறது ஜேர்மனியில் 1982முதல் ஒரு கட்சிதான் ஆட்சி நடத்துகிறது எமது நாட்டில் மட்டும் மாற்றம் தேவை என்று கூறப்படுவது ஏன் எனவும் கேட்டார்,

# சு.கட்சியின் புத்தி ஜீவிகள் ஐ.தே.கவில் இணைவாம்

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்க போன்ற புத்திஜீவிகள் ஐ தே. கவுடன் இணைந்து செயற்படுவது சுதந்திரக் கட்சியின் முறையற்ற நடவடிக்கைகளாலேயே ஆகும்.

இவ்வாறு கண்டி மாவட்ட ஐ தே க வேட்பாளர் சரத் அமுனுகம கூறியுள்ளார். தேர்தல் பிரசாரப்பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், கண்டியில் இன்று கூடியுள்ள மக்கள் வெள்ளத்தைப் பார்க்கும் போது எதுவித சந்தேகமும் இன்றி ஐ.தே.க வெல்லும் என நம்பலாம்.

சுதந்திரக் கட்சியின் உண்மையான தலைவர்கள் இப்போது பொதுமக்கள் முன்னணியின் கதிரையின் கீழேயே உள்ளனர் சுதந்திரக் கட்சியை வளர்ப்பதற்கு உயிரை பணயம் வைத்து வேலை செய்தவர்கள் பலர் அக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் பொது மக்களின் அபிப்பிராயத்தைப் பெற்ற விஜய விக்கிரமரட்ணாவுக்கு இன்று அக் கட்சியில் இடமளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

---

மாதங்களாக தேங்கியிருந்த போதும் எவரும் உரிமை கோரியிருக்கவில்லை. போலியான முகவரியுடன் இருப்பது உறுதிப்பட்டதை தொடர்ந்து பெட்டி சோதிக்கப்பட்ட போது தங்கம் கடத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ராகவும் ஆசிரியர்களாகவும் கடமை புரிந்த இளைப்பாறிய அதிபர் திரு கி. துரைசுவாமி, ஆசிரியமணி திரு ச. வேலுப்பிள்ளை, சமாதான நீதவான் திரு கி வைரமுத்து ஆகிய மூவரும் பட்டமளித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# காணி மோசடி செய்தவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரப் பகுதிகளிலும், புறநகர்ப் பகுதியிலும் அடுத்தவர்களின் காணிகளைத் தமது என்று உரிமை பாராட்டி விற்பனை செய்து கோடிக்கணக்கான ரூபாவை மோசடி செய்த ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்- சாந்த மாரசிங்க என்ற பெயரில் காணி மோசடிகளில் ஈடுபட்டு வந்த இந்த நபர் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான காணி விற்பனை ஒன்றிலும், வாகன விற்பனையொன்றிலும் ஈடுபட்டிருந்ததாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்-

இவர் ஹிப்பனாகொட பகுதியில் 12 ஏக்கர் காணியை தமது என்று கூறி 13 லட்சம் ரூபாவுக்கு விற்றுள்ளார் என்று பொலிசார் கூறியுள்ளனர்.

# தமிழ்மொழி தினவிழா மாணவர் வெளிநடப்பு

(கல்முனை)

கல்முனையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த் தினவிழா போட்டி முடிவுகள் குறித்து அதிருப்தி தெரிவித்து வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்கள் விழாவைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.

நடுவர்களின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டுமறறொருவகையில் முடிவு மேற்கொள்ளப்பட்டது என்பதே மாணவர்களின் இந் நடவடிக்கைக்கு காரணம் எனச் சொல்லப்படுகிறது.


வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 25-07-94 திங்கட்கிழமை அன்று ''இதயபூமி 1'' வெற்றித்தினத்தை முன்னிட்டு அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களையும் மூடி அன்றைய நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு அனைத்து உறுப்பினர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர்
சங்கங்களின் சமாசம்

(8921)


---

நினைவு கூருகின்றோம்

★ இக்குறிபிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-9971]

## 3-ம்ஆண்டுநினைவலைகள்

24-07-1994



**கப்டன் நந்தன்**
**(சின்னத்துரை ஜீவானந்தன்)**

பிறப்பு: 21-06-1964

வீரச்சாவு: 24-07-1991

24-07-1994 இன்று நடைபெறும் மூன்றாம் ஆண்டு நினைவுநாளில் உற்றார், உறவினர் நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில்கிழக்கு
சாவகச்சேரி, (8920) - குடும்பத்தினர்

நல்லூர் பிரதேச நூலகம் ... யாழ்ப்பாணம்

# ஜே. ஆர். அரசாங்கம் திட்டமிட்டு அரங்கேற்றிய

# 1983 யூலை தமிழின ஒழிப்பு கலவரம்

**1983** யூலை 24 ஆம் திகதி இரவு 7.20 மணி. திருநெல்வேலியில் பலியான 13 படையினரின் சடலங்களுடன் அவ்ரோ விமானம் இரத்மலானை விமான நிலையம் வந்திறங்குகின்றது. வழமைக்கு மாறாக படையினரின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாமல் கனத்தை மயானத்திற்கு கொண்டு செல்ல அதிகாரிகளால். முடிவெடுக்கப்படுகின்றது.

மறுநாள் திங்கள் யூலை 2 காலை9 30மணிக்கு ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தனா பாதுகாப்புச் சபை கூட்டத்தை ஜனாதிபதி மாளிகையில் கூட்டுகிறார் கூட்டத்தில் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். கூட்டம் நடைபெற்ற வேளை ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து 100 யார் தொலைவில் உள்ள தமிழருக்கு சொந்தமான அம்பாள் கபே தீயின் செந்நாக்குகளிற்கு பதமாக்கப்படுகிறது தொடர்ந்து யோர்க் வீதியில் தமிழருக்கு சொந்தமான பிரபல புடவைக்கடையான சாரதாஸ் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. ஜனாதிபதியின் வாசஸ்தலத்திற்கு அருகே பயிலிவீதியிலிருந்த தமிழ் வர்த்தக நிலையங்களிலும் தீ ஆம், இலங்கை வரலாற்றில் கறைபடிந்த ஜூலை கலவரங்கள் திட்டமிட்டு செயற்படுத்தப்பட ஆரம்பித்துவிட்டன.

## செல்லுபடியற்ற ஊரடங்கு

கொழும்பில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுவிட்டதாக ஜனாதிபதி அறிவிக்கின்றார். ஆனால் அது திட்டமிட்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்டிருக்கும் குண்டர்களுக்கு செல்லுபடியற்றதாகவே இருந்தது கோட்டையில் உள்ள ஆனந்தபவான், ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், அஜந்தா ஹோட்டல் அடுத்தடுத்து தீ வைக்கப்படுகின்றன.

கொம்பனித்தெரு, மருதானை, அரசமரச் சந்தி, நாலாம் குறுக்குத் தெரு பகுதிகளிலும் இருந்தன.

## குடியிருப்புகளும் தாக்கப்பட்டன

கொழும்பில் உள்ள தமிழர்களின் பொருளாதார இலக்குகள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள் பூர்த்தியானதும் சிங்கள குண்டர்களின் கவனம் கொழும்பில் தமிழர்களின் குடியிருப்புகள் நோக்கித் திரும்பின நாரஹேன்பிட்டி ஹெட்டியாவத்த, கிருலப்பனை பகுதியில் வர்த்தகர்களின் வீடுகள் தாக்கப்பட்டு வீட்டுடமைகள் கொள்ளையிடப்பட்டன. தொடர்ந்து அண்டர்சன் வீட்டுத்திட்டம் எல்வெட்டிகல குடியிருப்பு, ரொறிங்டன் வீட்டுத்திட்டம். திம்பிரிஸ்கசாய பகுதிகளில் தமிழர்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன அகப்பட்டவர்கள் பொலிசாரும், பாதுகாப்புப்படையினரும் கைகட்டிபார்த்திருக்க சிங்களக் குண்டர்களால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர் சிலர் எரியும் வீடுகளினுள் குற்றுயிராக தூக்கியெறியப்பட்டனர். புல்லர்ஸ் வீதி, கிரகரி வீதி என்பவற்றிற்கும் வன்முறைகள் பரவின தமிழின அழிப்பு திட்டமிட்டு சிறிலங்கா அரசினால் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்தது. நகரெங்கும் புகை மண்டலம்.

## கொழும்பில் அகதிகள்

கொழும்பு நகரில் மட்டும் 1800வீடுகள் எரிக்கப்பட்டோ அல்லது சேதமாக்கப்பட்டோ இருந்தன. தமிழரின் 3500 வர்த்தக நிலையங்கள் கருகிக்காணப்பட்டன. கொழும்பில் இந்நிலை காணப்பட்ட போது தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான அழிப்பு வேலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் செய்வதறியாது கையில் அகப்பட்டவையுடன் ஆலயங்களுக்கும் பாடசாலைகளுக்கும் உயிரைக் காத்துக் கொள்ள அகதிகளாகஓடினர். கொழும்பில் மட்டும் மூன்றிலொரு தமிழர்கள் அகதிகளாயினர்.

## மலையகத்திலும் தீ,

கங்களின் பின் உலங்கு வானூர்தி ஒன்று காமினி திஸ்ஸநாயக்காவுடன் நுவரெலியா சென்றடைந்தது. அதுவரை பதற்ற நிலையில் ஆனால் அமைதிநிலையில் இருந்த நுவரெலியாவிலும் தீபரவத் தொடங்கியது. தென்னிலங்கையிலும் மலையகத்திலும் இப்போது எங்கு திரும்பினும் தமிழர் இலக்குகள் தாக்கப்பட்டன. கண்டி, பதுளை பகுதியில் கலவரங்கள் வெடித்தன.

## பின்னணியில் அரசியல்வாதிகள்

பிரேமதாசாவின் சொந்தத் தொகுதியான பெற்றாவில் இருந்த முழுத் தமிழ்க்கடைகளும் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டன. ஜே ஆரின் சொந்த தொகுதியில் உள்ள தமிழர்களின் இடமான வெள்ளவத்தையில் இரத்த வெள்ளம் ஓடியது. வன்செயலில் ஈடுபட்ட சிங்கள குண்டர்கள் அணி அணியாக திட்டமிட்டு வழிநடத்தப்பட்டதை போன்று செயற்பட்டனர். இவர்களுக்கு ஆளும்கட்சி அரசியல்வாதிகள் பின்னின்றனர் ஒவ்வொரு குண்டரணித் தலைவனிடமும் தேர்தல் இடாப்பு இருந்தது தமிழர்களின் இருப்பிடங்களை அதன் மூலம் அவர்கள் கண்டறிந்தனர்.

## வெலிக்கடை படுகொலைகள்

அடுத்தகட்டமாக இந்த ஜூலை வன்செயலின் உச்சக்கட்ட கொடூரமும் நடந்தேறியது. ஆம் முழு உலகையுமே அதிர்ச்சிக்குள் ஆழ்த்திய தமிழ் மக்களின் மனங்களில் என்றுமே ஆறாத வடுவை ஏற்படுத்திவிட்ட அந்தவெலிக்கடை படுகொலைகள் நடந்தன.

கொழும்பு நகரிலிருந்து நான்குமைல் தொலைவில் உள்ள வெலிக்கடை சிறையில் ஜூலை 25-ம் திகதி 37 தமிழ் கைதிகள் தடிகளால்அடித்தும் கத்தியால் வெட்டப்பட்டும் கொடூரமாக கொல்லப்பட்டனர். தமிழ் கைதிகள் தனியாக அடைக்கப் பட்டிருந்த சிறையின் திறப்பை சிறைச்சாலை அதிகாரிகள் சிங்கள கைதிகளிடம் எவ்வாறு கையளித்தனர் என பின்னர் கேள்வி எழுந்தது படுகொலை நடந்து கொண்டிருந்த போது சிறை அதிகாரிகள் எவருமே அதில் தலையிட்டு தடுத்து நிறுத்த முன்வரவில்லை. மீண்டும் இரு நாள் கழித்து 27 ஆம் திகதியும் வெலிக்கடையில் தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 15 தமிழ் கைதிகள் பலியாகினர். இதன் மூலம் வெலிக்கடையில் கொலைப் பலியான தமிழர்களின் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்தது ஒரே சிறையில் அடுத்தடுத்து இரு படுகொலைகள் சிங்கள ஆட்சியின் கொடூரத்தை தமிழர்களுக்கு மட்டுமல்ல முழு உலகிற்குமே எடுத்துக்காட்டியது.

## திட்டமிட்டு நடந்தது

1983 ஜூலை படுகொலைகள் திடீரென ஏற்பட்ட உணர்ச்சி பிரதிபலிப்புகளல்ல அது இரு மாதங்களாக திட்டமிடப்பட்ட ஒன்று. 1983 மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் எடுத்த போராட்ட சார்பு நிலைக்காக அவர்களை பழிவாங்கவும் அச்சுறுத்தி அடிபணிய வைக்கவும் தமிழருக்கு எதிரான வன்செயலுக்கு ஜே. ஆர் அரசு திட்டமிட்டது இதற்காக சிங்களப் படைகளை தயார் செய்யவும் நீதி விசாரணைகளை இல்லாது செய்யவும் அரசு முதலில் சட்டம் ஒன்றை 1983 ஜூன் மூன்றாம் திகதி அமுலுக்கு கொண்டு வந்தது. இதன்படி ஜூலையில் தமிழின அழிப்பு தென்னிலங்கையில் கச்சிதமாக செய்து முடிக்கப்பட்டது.

## இடதுசாரிகள் மீது பழி

ஜூலை கலவரத்திற்கு தமது அரசு பொறுப்பில்லை என்ற மூடி மறைக்கும் முயற்சியில் அடுத்த கட்டமாக ஆளும் கட்சி இறங்கியது. தென்னிலங்கையில் ஏற்பட்ட வன்செயலில் தம்மிடமிருந்த அனைத்தையும் இழந்த தமிழர்களை சுமந்து கொண்டு கப்பல்கள் வடபகுதி நோக்கி வந்துகொண்டிருக்கும் அதே சமயம் கொழும்பு தமிழர்களின் வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் மூட்டிய தீயின் தணல் முற்றாக தணிந்திருக்காத அவ்வேளையில் ஜே ஆர் அரசு இக்கலவரங்களுக்கு தாம் பொறுப்பில்லை என அறிவித்தது. முழு அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நான்காம் திகதி தொலைக்காட்சியிலும் வானொலியிலும் உரையாற்றிய ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா வன்செயல் அரசுக்கு எதிரான சதி என்றார் கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக்கட்சி. ஜே. வி. பி. என்பனவே இதற்கு காரணம் என்றார் இவரை விஞ்சி நின்றார் அப்போதைய தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் வன்செயலுக்கு வெளிநாடு ஒன்றே பின்னிற்பதாகவும் ஐ. தே. கவை கவிழ்க்கும் சதியே இவ்வன்முறை என்றும் அவர் உரையாற்றினார்.

ஆனால், அதுமூடி மறைத்து விடக்கூடிய சமாச்சாரம் அல்ல காலம் கடந்தாலும் உண்மை வெளிவந்துவிட்டது இத்தமிழின அழிப்பு வன்செயல்களுக்கு யார் காரணம் என்பதை இக்கொடூரங்கள் நிகழ்ந்து சரியாக பத்து வருடங்களின் பின் அப்போது அரசிலிருந்த தமிழ் முக்கியஸ்தர் ஒருவர் தவறுதலாக தன்னையறியாது வெளியிட்டு விட்டார் உண்மைகள் நீண்ட காலம் தூங்காதல்லவா? கடந்த ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஒரு வைபவம் ஒன்றில் மதுவின் மயக்கத்திலிருந்த அந்த ஐ தே கவின் முக்கியஸ்தர் கொழும்பிலிருந்து வெளிவரும் ராவய எனும் பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவனுடன் சாதாரணமான முறையில் பேசிக் கொண்டிருந்த போது 83 இனக்கலவரம் பற்றியும் பேச்செழுந்தது அப்போது அந்தபிரமுகர் நானும் சிறில் மத்யூவும் மட்டுமல்ல அரசோடு இருந்த எல்லா முக்கிய அரசியல்வாதிகளும் இக்கலவரத்தை பாவித்துக் கொண்டோம். சிறில் மத்யூ. பிரேமதாசா, காமினி, லலித் போன்ற எல்லோரும் அந்த நேரத்தை பாவித்து தமக்கு வேண்டியதை செய்து கொண்டனர் ஆனால் நாம் எவரும் இது இவ்வளவு பெரிய சிக்கலை கொண்டு வரும் என அப்போது நினைக்கவில்லை. சாதாரண கலவரமாக முன்னைய காலங்களைப்போன்று எழுந்து அடங்கி விடுமென்றே கருதியிருந்தோம்' என்றார். இது ராவயவின் அடுத்த பிரதியின் தலைப்புச் செய்தியாக வெளிவந்த போது அந்த பிர

## மட்டக்களப்பில் பொலிசார் வீடு வீடாகச் சோதனை

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு பகுதியில் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. சோதனைச் சாவடிகளில் சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கோட்டை முனைப் பாலத்திலும், கல்லடி பாலத்திலும், லொறிகள். மற்றும் வாகனங்களில் கொண்டு வரப்படும் பொருட்கள் ஒவ்வொன்றாக இறக்கி சோதனையிடப்பட்ட பின்னரே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது.

அத்துடன் பொலிசார் வீடு வீடாகச் சென்று வதிவோர் பற்றிய விபரங்களைச் சேகரித்து வருகின்றனர். வாவியில் மீன் பிடிப்பதும்கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதே வேளை வாகரை, கொக்கட்டிச்சோலைபோன்ற பகுதிகளிலிருந்து. வாக்குப் பெட்டிகள் உலங்கு வானூர்திகள் மூலம் எடுத்து வரப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கணேசபிள்ளை பாலச்சந்திரன்**
**(பாலா)**

**மண்ணில்:** 08-06-71 **விண்ணில்:** 20-07-89

சந்திரனின் உதயத்தில் சண்டாளர்களால்
என் சந்திரனைக் கொன்ற நாளை-நான்
நினைத்துப் பார்க்கிறேன்.
நெஞ்சம் வேகுதடா!
நிழலாய் உன் முகம் நிஜம்போல் தெரிகையிலே
நீலவானத்தில் சந்திரனைப் பார்க்கிறேன்
பெற்ற வயிறு பற்றி எரியுதடா?
பாதகர்கள் ஏனய்யா என் பாலனைக்-
கொன்றார்கள்?
உனைப்பிரிந்து ஆண்டுகள் ஐந்தானதடா - ஆனால்
உன் பிஞ்சுக் கரம் பதித்த தடங்கள்

குறுக்குத் தெரு பகுதிகளில் உள்ள தமிழர்களின் சொத்துக்கள் சிங்கள குண்டர்களினால் நாசமாக்கப்பட்டும்கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்

மலையகத்திலும் தீ,

வன்முறை

கொழும்பில் தமிழர் மீதான தாக்குதல் நடந்து இரு தின

...ளித்தனர் என பின்னர் கேள்விகள் எழுப்பப்பட்டன. ஆனால் இப்பகுதி சதவுகள் திட்டமிடப்பட்டு மூடப்படாமல் இருந்ததாக கூறப்படுகி

...லை என அறிவித்தது. முழுப்பழியையும் இடதுசாரிகள் மீது சுமத்தி இடதுசாரிகளை தடை செய்வதாக அரசு அறிவித்தது. இது தொடர்பாக

...வெளிவந்த போது அந்த பிரமுகர் மட்டுமல்ல சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல் பிரமுகர்களுமே கையை பிசைந்து கொண்டிருந்திருப்பர்.

உன் பிஞ்சுக் கரம் பதித்த தடங்கள்
ஒரு கணமும் மாறாததடா?
பாலனே உனை நினைத்து பகலிரவாய்
அழுதுவிட்டேன்
பரிதவிக்கும் எமைப் பார்க்க உன் தரிசனம் தருவாயா!
விழிமூடாமல் விண்ணை நோக்கி விழித்திருப்போம்
ஒளிதருவாயா?

உன் பிரிவால் துயருறும்
இல 7/08. 1-ம் ஒழுங்கை அப்பா, அம்மா, சகோதரர்கள்
பிறவுண் வீதி, மற்றும் உற்றார், உறவினர்கள்,
யாழ்ப்பாணம் (சி-9976)

# சந்திரிகாவின் சண்டித்தனம் நாம்பயப்படப்போவதில்லை

**-அமைச்சர் விஜேபால மெண்டிஸ்**

(கொழும்பு)

திருமதி சந்திரிகாவின் ஆட்கள் சண்டித்தனத்தினால் வாக்குகளைப் பெற எண்ணுகிறார்கள். மக்கள் சண்டித்தனங்களுக்கு பயப்படப்போவதில்லை. நாங்களும் பயப்படுவதில்லை. இவ்வாறு அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கம்பகாவில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்போனபோது சுதந்திரக் கட்சியினர் பச்சை சேட், தொப்பி, போட்டவர்களைத் துரத்தித்துரத்தி தாக்கினார்கள். போக்குவரத்து பொலிசாரின் கட்டளைகளை மீறி தாங்கள் நினைத்தபடி வாகனங்களை கொண்டு சென்றனர். நீதியை நிலைநாட்ட வேண்டியவர்களே இப்படி நடந்தால் அவர்கள் எப்படி நாட்டை ஆளுவது? எனவும் கேட்டார்.

அத்துடன் 40 வருடங்களாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராகவும், கட்டான தொகுதி அமைப்பாளராகவும் இருந்த டி. ஜே. பெர்னாண்டோ புள்ளே, 35வருடம் சுதந்திரக் கட்சியுடன் இருந்த பேராசிரியர் கமால் கருணாநாயக்க போன்றோர் இப்போது ஐ தே.கவில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

# போட்டிகளில் பங்குபற்றிய அனைவருக்கும் வெற்றியே

**-செஞ்சிலுவை பிரதிநிதி தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

இன்றைய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் சரி, வெற்றி பெறுவதில் பின் தங்கியவர்களும் சரி, பெருமளவுக்கு துன்பப்படுத்தும் ஊனங்களிலும் துரதிர்ஷ்டங்களிலும் இருந்து விடுபடுவதில் வெற்றியையே பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம் நடத்திய போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதி செல்வி மேரி பெர்கின்ஸன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஊனமுற்றவர்களின் மறுவாழ்வு பணியில் பெரும் அக்கறையுடன் ஈடுபடும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்தினரைப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்.

## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் துறைத் தலைவர் பேராசிரியர் வ ஆறுமுகம் அவர்களுக்கு மணிவிழா இன்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் காலை 9 00 மணியளவில் நடைபெறும்.

## காணிகள் பகிர்ந்தளிப்பு

நெற்செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக முல்லை மாவட்டத்தில் 2186 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுவினர் காணிகளை பகிர்ந்தளித்துள்ளனர்.

முத்துவிநாயகபுரம், தட்டாமலை, கணேசுபுரம், கருவேலன்கண்டல், பேராறு வித்தியாபுரம், கற்சிலைமடு, புளியங்குளம், பண்டாரவன்னியன், கனகரத்தினபுரம், மன்னாங்கண்டல், முத்தையன் கட்டுக் குளம் ஆகிய பகுதிகளிலே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கே இக் காணிகள் வழங்கப்பட்டன.

முத்தையன்கட்டுக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் முகமாக மொத்தமாக சுமார் 3196 ஏக்கர் காணிகள் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுப்பாட்டை மீறியோர் மீது தேர்தலின்பின் நடவடிக்கை

**-அமைச்சர் தொண்டமான்**

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் எமது கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்ட எட்டுப் பேர் உள்ளனர் தேர்தல் முடிவடைந்ததும் இவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இ.தொ.கா ஒரு பலம் வாய்ந்த தொழிற்சங்கமாக மட்டுமல்ல, பலம்மிக்க ஒரு அரசியல் சக்தியாகவும் செயற்படுகின்றது. எனவே தான் ஐ தே.க. மலையகத்தில் தமக்கென ஒரு தொழிற்சங்கத்தை வைத்திருந்த போதும், ஐ தே.கவின் வெற்றிக்கு இ.தொ.கா தேவை என உணர்ந்து எம்முடன் உடன்பாடு செய்துள்ளது. அடுத்த பாராளுமன்றத்தில் இ தொ காவைச் சேர்ந்த 14 பேர் உறுப்பினர்களாக இடம் பெறுவர் என்று திடமாக நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் உரையாற்றிய காமினி திஸநாயக்கா தமது உரையில் ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட போது உரிய முறையில் செயலாற்றியிருக்கா விட்டால் கொழும்பு நகரம் மட்டுமன்றி முழு இலங்கையும் பெரும் குழப்பத்தில் மூழ்கி உயிர்ச் சேதம், பொருட்சேதம் பெருமளவில் ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவித்தார்.

# இனந்தெரியாதோர் செயல் வவுனியாவில் வீடு தீக்கிரை

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியிலுள்ள தேக்கம்காடு என்னுமிடத்தில் வீடு ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால் அவ் வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. தீவைப்பு இடம் பெற்ற போது வீட்டில் எவரும் இல்லாமையினால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் விஜேதாசா என்பவரது வீடே சேதமானதாகும். இச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் குறித்து எவ்வும் இனங்காணப்படவில்லையென பொலிசார் கூறியுள்ளனர் இப்பகுதியில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதவர்களால் குத்திக் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்

தோற்றம்
07- 09- 1944

மறைவு
25- 06- 1994



அமரர்

## சுப்பையா சின்னராசா

(ஆவரங்கால், புத்தூர்)

25-06-1994-ம் திகதி இயற்கை மரணமடைந்த அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25. 07. 94) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆவரங்கால் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆவரங்கால்,
புத்தூர். மனைவி, பிள்ளைகள்.
(8915)

# தவறுகளுக்கு மன்னியுங்கள் கட்சியை நிராகரிக்காதீர்

-ஐ.தே.க பொதுச் செயலர்

(கொழும்பு)

நாம் கடந்துவந்த பாதையில் சில தவறுகளை விட்டுள்ளோம். அதற்காக எங்களை மன்னியுங்கள். எம்மை நாம் திருத்திக்கொ வோம். யாராவது உங்களுக்கு சேவை செய்யவில்லை என்றால் அவர்களை நிராகரியுங்கள். ஆனால் கட்சியை நிராகரித்து விடாதீர்கள். இவ்வாறு ஐ.தே க பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா விடுத்த அறிக்கையொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், எதிர்வரும் தேர்தலுக்காக எமது கட்சியின் வேட்பாளர்களை நாம் மிகவும் கவனத்துடன் தேர்ந்தெடுத்துள்ளோம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. முன்னர் பாராளுமன்றத்திற்கு செல்லாத நூற்றி நாற்பது பேர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் உங்களுக்கு விருப்பமானவர்களைத் தெரிவு செய்யுங்கள். ஆனால் அனைத்து வேட்பாளர்களும் ஐ. தே. கவின் கொள்கைகளைப் பின்பற்றக் கடமைப்பட்டவர்கள் ஆவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஸ்லிமா நஸ்ரீன்

## புத்தகம் மீதான தடை ஒரு தேர்தல் பிரசாரம்

### சுதந்திர பத்திரிகையாளர் சம்மேளனம்

(கொழும்பு)

பங்களாதேஷ் பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் எழுதிய ''லஜ்ஜா'' என்ற புத்தகத்தை இலங்கை அரசாங்கம் தடை செய்தது ஓர் அரசியல் பிரசாரம் என சுதந்திர பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இப் புத்தகம் தடை செய்யப்பட்டமை தொடர்பான விமர்சனம் தற்போது விசேட அறிவுறுத்தல் மூலம் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியிருக்கும் நேரத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு மேற்கொள்ளும் ஓர் நடவடிக்கை இதுவென்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதைத் தொடர்ந்து முஸ்லிம் மக்களின் வாக்கு கிடைக்காமல்போகும் என்ற பீதியினால் இத் தடையை மேற் கொண்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

## மகாவிலாட்சி தாக்குதலில் பொலிசார் ஒருவர் காயம்

(அநுராதபுரம்)

கடந்த சில நாட்களின்முன் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மகாவிலாட்சிபொலிஸ் விடுதி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது கடமையில் இருந்த சிறிலங்கா பொலிசார் ஒருவர் காயமடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இத்தாக்குதலின் போது பொலிசாரின் காவலரண் ஒன்று விடுதலைப் புலிகளால் தீவைத்து எரிக்கப்பட்டதாகவும் அதேவேளை அப்பகுதியில் இருந்தஇராணுவ முகாம் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தியதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அஷ்ரப்பின் ஒப்பந்தத்தால் முஸ்லிம்கள் மீது சந்தேகம்

-அமைச்சர் அஸ்வர் தெரிவிப்பு

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் பொது ஜன ஐக்கிய முன்னணியின் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுடன் இரவோடு இரவாக செய்து கொண்டிருக்கும் இரகசிய உடன்பாட்டின் மூலம் முஸ்லிம் சமூகத்தை பெரும்பான்மையின மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் சூழல் ஏற்பட்டு விட்டது. இவ்வாறு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் எம். எச் எம். அஸ்வர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டம் கண்டக்குறிபகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இஸ்லாத்தைப் பற்றியும், நபிகள் நாயகம் மற்றும் அவர்களைச் சேர்ந்தோரைப் பற்றியும் மிகவும் மோசமாக எழுதிப்பிரபல்யம் பெற்ற சல்மான் ருஷ்டியுடன்தொடர்புடைய கலாநிதி சாணங்க அமரதுங்கவுக்குமுஸ்லிம்காங்கிரஸ் தேசிய பட்டியலில்முதலிடம்வழங்கியிருப்பது தொடர்பாகவும் குற்றம் சாட்டினார்.

## ஆஸ்பத்திரிச்சபை பதவி துறப்பு

(கொழும்பு)

சிறி ஜெயவர்த்தன புர வைத்திய சாலையின் ஆஸ்பத்திரிச் சபை பதவி துறந்துள்ளது. நிதிகளைத் துஷ்பிரயோகம் செய்தது, நிர்வாகச் சீர்கேடு புரிந்தது எனப் பல குற்றச்சாட்டுக்களை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சுமத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே ஆஸ்பத்திரிச் சபை பதவியை துறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### முறையற்ற உறவு நீதிமன்றில் தண்டனை

(வடமராட்சி)

திருமணம் செய்து பின்னர் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்த ஆணையும் இவருடன் தொடர்பு கொண்ட பெண்ணையும் நாகர்கோயில் காவல்துறையினர் கைது செய்து பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

செம்பியன்பற்றைச்சேர்ந்த ஆணும், பளையைச்சேர்ந்த பெண்ணுமே இவ்வாறு கா

## 4-வதுபிறந்ததினவாழ்த்து

### செல்வி தனபாலசிங்கம் மயூரிக்கா

அன்னையே எங்கிருந்தாலும் என்னை ஆசீர்வதிப்பாயாக அன்னையே! மூன்றாண்டு உன்னுடன் கொஞ்சிக்குலவி வண்ண வண்ண உடை உடுத்தி விதம்விதமாகஎன்னைச்சிங்காரித்துமுகமலர்ந்து கொண்டாடிய, என் பிறந்தநாள்! எந்நாளும் உன் பெயர் போன்று நித்தியமாய் நிற்கும் என் நெஞ்சில் நீங்கள் மறைந்து ஆறுமாதங்கள் மறைந்து விட்டன. நான்காவது ஆண்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.

### செ. சபாபதிப்பிள்ளை

தோற்றம்: 07 - 05 - 1920

மறைவு: 04 - 08 - 1993

திதி: 24 - 07 - 94 ஞாயிறு

எங்கள் முன்னேற்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து 'வழிகாட்டி' யாக, உறுதுணையாய் நின்ற எங்கள் அன்புத் தெய்வமே! எங்களைவிட்டு இறைவனடி சேர்ந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்பு,

## 7-ம் ஆண்டு நினைவுதினம்

### வீரவேங்கை கருணா
(செல்லத்துரை தயாபரன்)

மண்ணில் 25-4-1972 விண்ணில் 11-08-1987
திதி 24 - 07 - 1994

ஆண்டு ஏழு சென்றாலும் அழியவில்லை-உன்நினைவு
கருணா - கலங்குகின்றோம் உன் நினைவால்

இவருடன் வீரச்சாவடைந்த வீர வேங்கைகளை நினைவு கூர்ந்து இவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும் உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

உன் நினைவகலாத
அப்பா, அம்மா
சகோதரர்கள்
உற்றார், உறவினர்
நண்பர்கள்,

நாகர்கோவில் வீதி,
எழுதுமட்டுவாள்.

(8896)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் த. தருமலிங்கம்
[மட்டுவில் மகாவித்தியாலய முன்னாள் ஆசிரியர்]

முளையாக 6. 6. 1932

விதையாக 24. 7. 1991

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குறை தீர எமை
வளர்த்து
கொடுங்காலன் உலகிற்கு சென்றதனால்
தவிக்கின்றோம்
படும்துயரம் தாளாமல் நேகின்றோம் இருந்தாலும்
நெடும் தூரம் போனாலும் ஆத்மாவின் சாந்திக்காய்
தொழுகின்றோம் மலர்பாதம் தினம் னும்மை
நினைத்திங்கு

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளை,
நண்பர்கள்,
உறவினர்கள்.

'திருவேலகம்'
ச. சண்முகம் வீதி,
சாவகச்சேரி.

(8906)

டில் தனிப்பறவையாக உங்கள் அன்புக்குஞ்சு, நடைபயிலப்போகின்றேன். இந்நன்னாளில் நித்திய லசுமியாகிய என் அன்னையே! நித்தியமும் உங்கள் ஆசியையும் அன்புமுத்தத்தையும் எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றேன். விண்ணுலகில் இருக்கும் நீங்கள் என்னை அன்புடனும் பாசத்துடனும் ஆசீர்வதிப்பீர்களாக.

சிவமஹால்
பருத்தித்துறை

அன்பு மழலை
த. மயூரிக்கா
(8855)

பெண்ணும் இவ்வாறு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணைக்கு உட்படுத்திய பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளர் ஆணுக்கு பத்தாயிரம் ரூபா குற்றப்பணமும் ஒரு மாத சிறையும், பெண்ணுக்கு மூவாயிரம் ரூபா தண்டமும் செலுத்துமாறும் பெண்ணை எச்சரிக்கை செய்து தீர்ப்பு வழங்கினார். (யோ)

னடி சேர்ந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்பு, பாசம், அறிவுரைகள், தொண்டுகள் என்றென்றும் எங்கள் உள்ளங்களை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு: இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்று 24-7 94இல் நடைபெறும் மதிய விருந்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சபா விற்பனை நிலையம்,
அச்சுவேலி,
(8909)

அன்பு மனைவியும்,
மக்களும், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.


## தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப்படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக்கொடுக்கும்

முன்னணி நிறுவனம்

# ★ படமாடம் ★

சகலவிதமான
★ பூக்கண்ணாடி
★ சாதாரண கண்ணாடி
★ இனிப்பு கண்ணாடிப் பெட்டிகள்
★ மீன் தொட்டிகள்
★ 24X36 1|2 நூல் கண்ணாடி

ஆகியவற்றை மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்


**படமாடம்**

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட சகல வகை பூக்கண்ணாடிகளும் மலிவு விலையில் விற்கப்படுகின்றன.

(சி-9974)


## 11-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மகாதேவா இராஜகாந்தன் (பவுண்)**
**(மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன்)**

தோற்றம்: 26-03-1964
மறைவு: 24-07-1983

கல்கிசை

தகவல்:
செ. அச்சுதன்

உன் பிரிவால் துயருறும்
அம்மா, தங்கை

(8861)

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
1913. 09. 26

முருகன் மடியில்
1985. 07. 24

**முத்துக்குமாரு**
**மயில்வாகனசுவாமிகள்**

எங்கள் குருவே உங்கள் இறுதி மூச்சுவரை உங்கள் பாதம்பட்ட ஆனந்த ஆச்சிரமத்திலேயே நீங்கள் விட்டுச் சென்ற புனிதப் பணியை நாங்கள் தொடர்கின்றோம். நாங்கள் எமது மூச்சுள்ளவரை நீங்கள் செய்தது போலவே ஆனந்த ஆச்சிரமத்தில் அன்னதானப் பணியை உங்கள் தொண்டர்களாகிய நாங்கள் செய்து வருகிறோம்.

என்றும் உங்கள் ஆசியை வேண்டும்

**ஆனந்தாச்சிரமத் தொண்டர்கள்**

சந்நிதி ஆலய உற்சவம் 7-8-94ஆம் திகதி ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளது. அத்தினங்களில் மதியவேளை ஆனந்தா ஆச்சிரமத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். ஆனந்தா ஆச்சிரம அன்னதானப் பணிக்கு உதவி செய்ய விரும்புவோர் நேரடியாக தொண்டர்களூடாக வழங்கவும். இந்த ஆச்சிரமத்தின் பெயரைச் சொல்லி வருபவர்களிடம் உதவிகள் வழங்க வேண்டாம்.

பி கு. 12-8-1994 வெள்ளிக்கிழமை எமது குருவின் நினைவுநாள் (திதி) ஆனந்த ஆச்சிரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆனந்தாச்சிரமத் தொண்டர்கள்**

ஆனந்தாச்சிரமம்
செல்வச்சந்நிதி
தொண்டமானாறு.

(8859)

யாழ்ப்பாணம்

# சிந்தனைக்கு..

யூதர்கள் சிந்திய கண்ணீர்த் துளிகள் கனமானவை ஏனெனில் பல நூற்றாண்டுகளின் பாரத்தை அவை தாங்கி வருகின்றன.

- லெயோன் ப்ளாஸ்-

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 24-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## என்றுமே மறக்கமுடியாத "கறுப்பு யூலை"

'கறுப்பு யூலை' என அழைக்கப்படும் அளவிற்கு தமிழர் வாழ்வில் துயர் படிந்த இனக்கலவரத்தை 1983ஆம் ஆண்டுயூலையில் இதேதினத்தில் தான் சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிட்டது. அன்றிலிருந்து சுமார் ஏழு நாட்கள் உச்சமாக நடைபெற்ற இனக்கலவரங்கள் தமிழ் மக்களுக்கு விளைவித்த கொடூரம் இலகுவில் விபரித்து விடக் கூடியதல்ல.

23ஆம் திகதி திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கரந்தடித்தாக்குதல் மூலம் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கலவரம் எழுந்ததாயினும் இதுஉண்மையில் அதன் எதிரொலியாக எழுந்ததல்ல, ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசால், திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே இதுவாகும்.

இது ஒரு வகையில், தமிழ் மக்களை மிரட்டிப் பணிய வைக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை இதன் மூலம் அடக்கிவிடலாம் என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

இவ் இனக்கலவரத்தை அரசாங்கம் திட்டமிட்டே மேற் கொண்டது என்பதற்கு பல ஆதாரங்கள் தெளிவாகவே இருக்கின்றன. தற்பொழுதும் இதற்கான ஆதாரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றைவிட அரசாங்கம் இனக்கலவரத்திற்கு ஆதரவாக இருந்தது என்பதற்கு, கலவரத்தை அடக்க அரசாங்கம் முயற்சி செய்யாமையும், வெலிக்கடைச்சிறைச்சாலையில் நடந்த படுகொலைகளுமே போதுமான சான்றுகளாகும்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில், ஒருதரமல்ல, இருதரம் படுகொலைகள் நடந்தன. இக்கொலைகள் நடை

# எதிலும்பணம் பண்ணுவதே ஜெயலலிதா அரசின் திட்டம்

(சென்னை)

காட்டு மரங்களை வெட்டி விற்று ரூபா ஐம்பது கோடி வரை திரட்டுவதற்கு சசிகலா தம்பதிகள்திட்டமிட்டுள்ளனர் இதனைத் தடுப்பதற்கு போராட்டம் நடத்தப்பட வேண்டும். இவ்வாறு தமிழக முன்னாள் அமைச்சரும், முன்னாள் சபாநாயகருமான க.ராசாராம் கூறியுள்ளார்.

சென்னையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் ஜெயலலிதா அரசு எதில் பணம் பண்ணுவது என்பதில் தான் விழிப்போடு இருந்து செயற்பட்டுக் கொண்டு வருகிறது

ஜெயலலிதா முதல்வரான பின்னர் தமிழ்நாட்டில் சந்தண மரங்கள் வேகமாக காணாமல் போகத் தொடங்கியது. சென்ற மாதம் கூட சேலத்தில் ஒருலொறிசந்தண மரக்கட்டைகள் பிடிபட்டன பிடிபட்டதுஒருலொறிகாணாமற் போன லொறிகள் எத்தனையோ? தருமபுரி, சேலம் மாவட்டங்களில் மத்திய அரசு விசாரணை நடத்தினால் பல திடுக்கிடும் உண்மைகள் கிடைக்கும்.

கூடலூர் பகுதியிலிருந்து றோஸ் வூட் என்னும் மரங்களை வெட்டி விற்பதற்காக கோவை வட்டாரத்திலிருந்து சுமார் பத்துக் கோடி ரூபா போயஸ் தோட்டத்திற்கு சென்றுள்ளது இந்த அக்கிரமத்தை தடுத்துநிறுத்த உடனடியாக போராட்டம் நடத்துவதை தவிர வேறுவழி தெரியவில்லை. மராட்டியத்தில் பாபா ஆம்தே டெல்கியில் மேனகா காந்தி போன்றோர் மரங்களை வெட்டுவதற்கு எதிராக போராடுவதைப் போல உதகையிலும் அனைத்துக்கட்சித் தலைவர்களும் இணைந்து போராட முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## குண்டுதுளைக்காதகோட்டை எதுவும் செய்ய முடியாது

- ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க. என்பது குண்டு கூட துளைக்க முடியாத ஒரு கோட்டை நேற்றைய மழையில் முளைத்த காளான்களும், வெத்து வேட்டு வீணர்களும், வறட்டுக் கிணற்றுத் தவளைகளும், நம்மை என்ன செய்து விட முடியும் என்று முதல்வர் ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் அமைச்சர் துரை ராமசாமியின் மகன் சுதர்சனுக்கு நடந்த திருமண வைபவத்தை முன்னின்று நடத்திய முதல்வர் ஜெயலலிதா அங்கு மேலும் கூறுகையில், எம். ஜி. ஆர் ஊட்டி வளர்த்த குடும்ப பாச உணர்வு இன்று புதிய பொலிவை பெற்றுள்ளது புதியவலுவைச் சேர்த்துள்ளது. அரசியல் வானில் புடம் போட்ட தங்கங்களாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறோம் நேற்றைய மழையில் இன்று முளைத்த காளான்களும், வறட்டுத் கிணற்றுத் தவளைகளும் நம்மை என்ன செய்துவிட முடியும்? குண்டு துளைக்காத கோட்டையான அ. இ. அ. தி மு. கவை இவர்கள் வீசுகின்ற கற்கள் சேதப்படுத்தி விடும். மக்கள் பேராதரவு என்ற மாபெரும் சக்தி நம்மிடம் இருக்கும் வரை இவர்களது கூச்குரல்களுக்கு செவி சாய்க்க வேண்டிய அவசியம் நமக்கு சற்றும் இல்லை. நல்லதையும், நல்லவர்களையும் மக்கள் என்றென்றும் ஆதரிப்பார்கள், பாராட்டுவார்கள் என்பது உலக நியதி இந்த உண்மையை அறியாத சிறுமதியாளர்களுக்கு நாம் மக்கள் அரங்கு என்ற களத்தில் இன்னும் எத்தனை முறை வேண்டுமானாலும் பாடம் புகட்ட தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## வாழப்பாடியின் கூற்றுக்கு காங்கிரஸ் எம்.பி. கண்டனம்

(சென்னை)

இட ஒதுக்கீட்டு பிரச்சினைக்காக டில்லி சென்று வந்த முதல்வரின் பயணத்தை டில்லிக்கு காவடி தூக்கும் செயல் என்று வர்ணித்த வாழப்பாடியின் கூற்று கண்டனத்திற்கு உரியதாகும். இவ்வாறு கோவை செல்வராஜ் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் தமிழக மக்களின் ஒட்டு மொத்த உணர்வுகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் முதல்வர் அனைத்துக் கட்சி தலைவர்களையும் அழைத்துச் சென்று பிரதமரை சந்தித்து பேச்சு நடத்தினார். முதல்வரின் இந்த நடவடிக்கையை தி.மு.க காங்கிரஸ், ம.தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவை புறக்கணித்தது துரதிர்ஷ்ட வசமானது.

இதனை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கண்டித்துள்ளமை மூன்றாம் தர அரசியல் செயற்பாடாகும். இதன் மூலம் காங்கிரசின் கௌரவம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. எனவும் தெரிவித்தார்.

ராஜீவ் கொலை வழக்கு

## எதிர்த்தரப்பு வழக்கறிஞர் இருவாரமாக பகிஷ்கரிப்பு

## வருடாந்த திருநாள்

(குருநகர்)

சிறிலங்கா விமானப்படையினரால் குண்டு வீசி சிதைக்கப்பட்ட குருநகரின் இதயமான புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருநாள் நாளை காலை சிறப்பாக நடைபெற இருக்கிறது.

இன்று மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனை சுற்றுப்பிரகாரம் ஆகியன இடம்பெறும்.

நாளை காலை 6-30 மணிக்கு நடைபெறும் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து சிறப்பிப்பார்.

அதனைத் தொடர்ந்து திரு

## காடைத்தனத்தை மக்கள் அனுமதித்தல் ஆகாது

-குணரத்ன வீரக்கோன்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர்கள் நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தி குழப்பங்களை விளைவிக்க முயற்சிப்பதாக தெரியவருகிறது. மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தினால் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று இரண்டு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு சிறந்த பாடத்தைக் கற்றுக் கொடுக்க தயாராக இருக்கின்றனர்.

இவ்வாறு தென் மாகாண உணவு கூட்டுறவு அமைச்சரும், காலி மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளருமான குணரத்ன வீரக்கோன் தெரிவித்தார். எல்பிட்டிய பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தென் மாகாண சபைத் தேர்தலின் போது பிரசாரக் கூட்டமொன்றில் அமைச்சர் ஒருவர் காடையர்களைத் தூண்டி விட்டு துப்பாக்கி முனையில் கரந்தெனிய மக்களைப் பயமுறுத்த முனைந்தார். ஆனால் அப்பகுதி மக்கள் ஆயுதங்களுடன் வந்து காடையர்களைத் துரத்தி விட்டனர் அதே போன்று பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர்கள் காடைத்தனத்தைப் பாவித்தால் அவர்களுக்கு மக்கள் சக்தியின் மூலம் சிறந்த பாடம் புகட்டப்படும்.

எதிர்வரும்16ம் திகதிக்குபின்னர்இந்தநாட்டில் பயங்கரவாதமற்ற ஊழலற்ற மக்களை சிறந்தமுறையில்பரிபாலிக்குப் திறமையான அரசாங்கமொன்று நிறுவப்படும். அதனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் குறிப்பிட்டார்.

## விகிதாசாரத் தேர்தலின் கீழ் பிரச்சினைக்கு தீர்வில்லை

-ஜனாப் முஸ்தபா

(கொழும்பு)

பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் விகிதாசார தேர்தல் முறை கடைப்பிடிக்கப்படும் வரை இனப் பிரச்சினைக்கு எக் காரணம்கொண்டும் தீர்வு காண முடியாது இத் தேர்தல் முறை அமுல்படுத்தப்படுவதில் இருந்தே இந் நாட்டு மக்கள் இன ரீதியான பழக்கத்தை உடையவர்களாக மாறி உள்ளனர்.

இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணியும், ஐ.தே கவின் தேசிய பட்டியலில் இடம் பெற்றிருப்பவருமான ஜனாப் எம்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசியஅவர் மேலும் கூறுகையில் விகிதாசார பிரதிநிதித்துவமுறையின் கீழ் கிழக்குமாகாணம், கொழும்பு போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் தமது பிரதிநிதித்துவங்களை இழக்கும் வாய்ப்பு அதிகமாகவே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நன்றி உணர்வுடன் முஸ்லிம்கள் ஐ.தே கவை ஆதரித்தாலும் முஸ்லிம்களுக்கும் பிரச்சினை இருப்பதை ஐ.தே.க விளங்கிக் கொள்ள வேண்டும் தற்போதைய அரசியல் வெறும் சூதாட்டமே இப் பொதுத் தேர்தலில் நன்றி உணர்வு ரீதியில் நான் ஐ தே. கவை ஆதரிக்கும்படி எமது மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன் எனவும் தெரிவித்தார் அத்துடன் இம் முறை மட்டுமே இத் தேர்தல் முறை இருக்கும் அடுத்த முறை தொடக்கம் தொகுதிவாரியான தேர்தலையே மீண்டும் அறிமுகம் செய்ய இருப்பதாக ஜனாதிபதி டி பி விஜேதுங்க தம்மிடம் கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## புதிய உலகை சந்திக்க புதியமுறையில்சிந்தியுங்கள்

- ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

புதியதோர் உலகத்தை சந்திக்கவிருக்கும் எதிர்கால மாணவ சமுதாயம் புதிய

வேண்டும்.

கட்டுகஸ் தோட்ட புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவ

வெலிக்கடைச் சிறைச்சாலையில், ஒருதரமல்ல, இரு தரம் படுகொலைகள் நடந்தன. இக்கொலைகள் நடைபெற்ற போது பூரணமான பாதுகாப்புடன் இருந்த சிறைச்சாலையின் பூட்டுக்கள் எவ்வாறு திறந்தன. சிறைச்சாலையின் பாதுகாப்பு ஊழியர்கள் எங்கேபோனார்கள் என்ற கேள்விகளுக்கு என்றுமே சிறிலங்கா அரசாங்கத்தால் பதில் கூறி விட முடியாது.

இவற்றை விட கலகக்காரர்களுக்கு அமைச்சர்கள் தலைமை தாங்கியதும், அரச அதிகாரிகளிடம் இருந்து வாக்காளர் பட்டியல்கள் கலகக்காரர்களின் கைகளுக்குச் சென்றமையும் இனக்கலவரங்களில் அரசின் பங்கை வெளிக்காட்டுபவையாகவே இருந்தன.

இவ் இனக்கலவரத்தின் போது பௌத்தர்கள் புரிந்த இனப்படுகொலையும், அக்கிரமமும் பௌத்த மதப் போதனைகளையும், கௌதம புத்தரையும் அவமானப்படுத்துவதாகவே இருந்தது. பௌத்தத்தின் பேரால் செய்யப்பட்ட அப்படுகொலைகளைக் கண்டு உண்மையான பௌத்தன் எவனாவது இருந்திருந்தால் கண்ணீர் வடித்திருப்பான். ஏனெனில் அன்றைய பௌத்த சிங்களவர்கள் இரத்த வெறி பிடித்த சிங்கம் போன்றே அலைந்தனர்.

இதேசமயம், இவ் இனப்படுகொலையை எதற்காக பௌத்த- சிங்களப் பேரினவாதிகள் நடத்தி முடித்தார்களோ, அது நடைபெறவில்லை. மாறாக, எதிர் விளைவுகளையே ஏற்படுத்தின கலவரத்தைக் கண்டு தமிழர்கள் அஞ்சிவிடுவார்கள், தமது விடுதலைப்போராட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள் என எண்ணிய சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிர்கால நிகழ்வுகள் அதிர்ச்சியையே கொடுத்திருக்கும்.

சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்ட இனப்படுகொலையானது, இலங்கையில் தமிழரின் பாதுகாப்புத் தொடர்பாகவும், சுதந்திரமான வாழ்வு தொடர்பாகவும் பெரும் கேள்வி ஒன்றையே எழுப்பியது, தமிழரின் பாதுகாப்பு தமிழ் இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது என்பதை தெளிவுபடுத்தியது. இல்லாது போனால் இலங்கையில் தமிழ் இனம் அழிந்து போவது தவிர்க்க முடியாதது என்பதையும் உணர்த்தியது.

இந்நிலையில் தான், தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் புதிய பரிணாமம் பெற்று வளர்ச்சி அடைந்தது. சிங்களப் பேரினவாதத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள தமிழ் மக்கள் தயாராகினர். தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் இன்றைய வளர்ச்சிக்கட்டத்தை அடைவதற்கு உந்து சக்தியாகியது. சிங்களப் பேரினவாதம் விரும்பிய போதெல்லாம் தமிழருக்கு அடிப்பதற்கு கை தூக்க முடியாமல் செய்தது.

## இருவாரமாக பகிஷ்கரிப்பு

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விசாரணை இரண்டாவது வாரமாக தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விசேட நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் கடந்த ஒருவருடமாக நடைபெற்று வரும் ராஜீவ் காந்தி கொலை விசாரணையில் எதிர்த்தரப்பு சார்பில் வாதிடும் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தை தொடர்ந்து பகிஷ்கரித்து வருவதாலேயே இந்த விசாரணை நடைபெறாது தடைப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ராஜீவ் கொலை வழக்கு விசாரிக்கவிடாமல் சதி

-எஸ்.ஆர்-பி. தெரிவிப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையை நடத்த விடாமல் தடுக்க சதி நடக்கின்றது எனச் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணையை நடத்த விடாமல் செய்வதற்காக சதி மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் பின்னணியில் ஒரு பகுதியினர் திட்டமிட்டு செயற்படுவதாகவும், இதனால் இவ் வழக்கு காலம் கடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## பூமியின் வெப்பமதிகரிப்பு அவதானிகள் எச்சரிக்கை

பூமி வெப்பமடைந்து வருவதால் ஏற்படும் நீராவி வெளியேற்ற அதிகரிப்பானது பல முகில்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைவதுடன் புவியின் வெப்பநிலையை மேலும் உயர்வடையச் செய்யலாம். இவ்வாறு காலநிலை அவதானிப்பாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

புவியின் சக்தி, நீர் சுழற்சி என்பன தொடர்பாக இடம்பெற்றுவரும் மாநாட்டின் ஆரம்ப தினத்திலேயே பத்திரிகையாளர்களிடம் இதனைக் காலநிலை அவதானிப்பாளர்கள் தெரிவித்தனர். முன்னணியில் திகழும் விஞ்ஞான ஆய்வு அமைப்பான அரச சமூகத்தின் (றோயல் சொஸா) இம் மாநாட்டிற்கு அனுசரணை வழங்கியுள்ளது.

இங்கு கருத்து வெளியிட்ட உலக காலநிலை அவதானிப்பு நிகழ்ச்சித் திட்ட அமைப்பின் பணிப்பாளர் பியரி மொரல் கூறுகையில், பூமிக்கு மேலாக அதிக முகில்கள் உருவாகுவதால் ஏற்படும் சூழல் பூமியை அதிக அளவில் வெப்பமடையச் செய்யும் எனத் தெரிவித்தார்.

முகில்களின் அவதானிப்பில் நாடுகளின் விண்வெளி அவதான நிலையங்கள் பரந்துபட்ட பங்களிப்பை நல்க வேண்டும் என விஞ்ஞான வழிகாட்டல் குழுவின் தலைவர் முஸ்தாபா யாசின் கேட்டுக் கொண்டார்.

ந்து சிறப்பிப்பார்.

அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆரம்பமாகும்.

சாளரம்

## 3ஆம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் வெளியீடு

சாளரம் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

சாளரம் ஆசிரியர் விவேக் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கவிஞர் புதுவை இரத்தினதுரை, வே பாலகுமாரன், இன்பன், செம்பியன் செல்வன், பொ. ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்-

## கொள்ளைக் கோஷ்டி கைதாகியது

புறக்கோட்டையிலுள்ள இரு வர்த்தக நிலையங்களில் புகுந்து அங்கிருந்தோரை வெட்டிக் காயப்படுத்தி விட்டு ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான நகைகள், ரொக்கப்பணம் போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்ற ஆயுதம் தாங்கிய கோஷ்டி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளது-

## கடன் வழங்கப்பட்டது

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை சுயதொழிலில் ஈடுபடவைத்து அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் முகமாக பளையில் 15 குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புகடன் வழங்கப்பட்டது

கடந்த 14 ம் திகதி பளை வட்டச்செயலகத்தில் வைத்து வழங்கப்பட்ட இக் கடன் உதவியில் ஒரு குடும்பத்திற்கு தலா 10,000 ரூபா வீதம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திக்கவிருக்கும் எதிர்கால மாணவ சமுதாயம் புதிய திசையில் சிந்திக்க வேண்டும், எதிர்கால மாணவ சமுதாயம் புதியதோர் உலகத்தை சந்திக்க இருக்கிறது, இன்றைய காலகட்டத்தை விடவும், மிகவும் மாறுபட்ட, வேறுபட்ட காலமொன்று அப்போது உருவாகும். அதற்குப் புதியமுறையிலான கல்வியே அவசியம். எனவே புதிய அறிவுத் திறனோடு அதனை நாம் அணுக

அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், சிறந்த வாழ்க்கை முறையும், திறமையும், தலைமைத்துவ பண்புகளும் தான் சிறந்த பிரஜைகளுக்கு இலக்கணம். இந்த அரிய பண்பாடு நிறைந்துவிட்டால் ஒரு மனிதன் சமுதாயத்தில் உயர்ந்தவனாக மதிக்கப்படுவான் எனவும் தெரிவித்தார்.

## மக்கள் விரும்பும் மாற்றம் நாட்டை அழிக்கக் கூடாது

ரொனி டிமெல்

ஒரே கட்சி தொடர்ந்து 17 வருடங்கள் ஆட்சி நடத்தும் போது மக்கள் மாற்றத்தை விரும்புவது இயற்கையே. ஆனால், அந்த மாற்றங்கள் நல்ல நோக்கில் அமைய வேண்டுமே தவிர அழிவுப் பாதையில் செல்வதாக இருக்கக்கூடாது.

இவ்வாறு துறைமுக கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ரொனி டி. மெல் தெரிவித்தார். தெனியாயவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நல்ல வழியில் இல்லாது போனால் நாடு அழிவுப் பாதையில் செல்ல நேரிடும்.

வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் எமது எதிரிகள் நடத்திய காடைத்தனமான சண்டித்தனம் போன்ற வன் செயல்கள் எதிர்காலத்திலும் இடம் பெறும். அதில் எந்தச் சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை

நான் அரசாங்கத்திலிருந்து ஒதுங்கியிருந்த போது சில மாற்றங்கள் ஏற்பட்டன. அதனால் விலை வாசி உயர்வும் ஏற்பட்டது. அந்தத் தவறை உணர்ந்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அவற்றை இப்போது சீர் செய்து வருகிறார்.

பொருட்களின் விலையைக் குறைக்கும் போது இதனை தேர்தல் குண்டெனக் கூறுகின்றனர். வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழாமல் - பண வீக்கம் ஏற்படாமல்: 11ஆண்டு காலம் பொருட்கள் நியாய விலைக்கு கிடைக்க வழி செய்தவன் நான் எனவும் தெரிவித்தார்.

## புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-07-24**

**ஞாயிறு இரவு**

08. 01- இசையரங்கம்- நிகழ்ச்சியில் பாடுபவர் செல்வி. சு தாரிகா அவர்கள்
08. 20-தாயகப்பாடல்கள்
08. 30- செய்திகள்
08. 40- தொடர்நாடகம்- இலங்கைமண் 33-ம் அங்கம்.

**1994-07-25**

**திங்கள் காலை**

07. 02- மாவீரவணக்கம்
07. 15- மணியாரம்
07. 30- செய்திகள்
07. 35-பத்திரிகைச்செய்திகள்
07. 40- தாயகப் பாடல்கள்.

# 2-ம் உலக யுத்தகால கொடுமைக்கு ஜப்பான் பிரதமர் மன்னிப்பு கோருவார்

(சியோல்)

2-ம் உலகப் போரின்போது ஜப்பானியப் படைகள், கொரிய மக்களை இம்சைப்படுத்தியதற்கு மன்னிப்புக் கோருமாறும் நஷ்டஈடு தருமாறும் நூற்றுக்கணக்கானோர் நேற்று சியோலில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜப்பானியப் பிரதமர், டொமிச்சி மொரயாமா, சியோலுக்கு வந்து சேர்ந்துள்ள வேளையில் இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

வடகொரியாவின் புதிய தலைமை பற்றி மொரயாமாவும், தென்கொரிய ஜனாதிபதியும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளனர். வடகொரியாவின் அணு வாயுத நடவடிக்கைகள் பற்றியும் பேச்சுக்களில் இடம்பெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சியோலுடனான வர்த்தக உறவுகளில் மாற்றமேற்படுத்தப்படமாட்டாதெனவும் மொரயாமா உறுதி கூறியுள்ளார்.

இந்த விஜயத்தின் போது 1910 - 1945 வரையும் ஜப்பான் கொரியாவை ஆண்டபோது மக்களை இம்சைப்படுத்தியதற்காகமொரயாமா பகிரங்க மன்னிப்புக் கோரவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹேமாவிற்கு புதிய பஜிரோ விஜேதுங்கா ஏற்பாடு

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசவிற்கு 1995 ஆம் வருட புதிய அமைப்புடைய நவீன பஜிரோ குளிரூட்டப்பட்ட வாகனத்தை பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி விஜேதுங்க உத்தரவிட்டுள்ளார். தீர்வையற்ற வகையில் இவ் வாகனம் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்றது.

மேலும் கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட தொலை பேசி வசதியொன்றினையும் அவருக்கு பெற்றுக் கொடுக்குமாறு சிறிலங்கா தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு கட்டளையிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நிமிடத்திற்கு ஒரு குழந்தை பலி

(இகாலி)

ருவாண்டா அகதிகள்தங்கியுள்ள சயர் நாட்டு எல்லைப் புறத்தில் கொடிய வாந்தி பேதி நோயினால் ஒரு நிமிடத்துக்கு ஒரு குழந்தை பலியாகுவதாக ஐக்கிய நாடுகளின் துயர் துடைப்பு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், சயர் நாட்டு எல்லைப் புறத்தை விட்டு உடனடியாக அகதிகளைவெளியேறுமாறு ஐ. நா துயர்துடைப்பு பணியாளர்கள் கேட்டுள்ளனர்.

## நாடு கடத்தப்பட்டவர்கள் தமக்குதாமேதீமூட்டமுயற்சி

(கோலாலம்பூர்)

சீனாவிலிருந்து சட்ட விரோதமாக மலேசியாவுக்குள் புகமுயன்ற 20 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் இவர்கள் சுவாங் சர்வதேச விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகையில், இவர்களில் சிலர் தங்களின் உடலில் மண்ணெண்ணெய்யை ஊற்றி தீவைக்க முயன்றார்கள்.

நாடு கடத்தப்பட்டவர்களில் ஐந்து பெண்களும், ஆறு சிறுவர்களும் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

## வன்னிப் பிராந்தியத்தில் மாபெரும்விளையாட்டுவிழா

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 19 வட்டங்களைச் சேர்ந்த சுமார் 5000 வீரர்கள் கலந்து கொண்ட வன்னி விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் கிளிநொச்சி விளையாட்டரங்கில் நடைபெற்றன. இப்போட்டிகளில் பல விதமான போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. மின்னொளியிலும் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

## அகத்கப்பல் மாலுமிகள்மீது ஆகஸ்ட்டில் விசாரணை

சென்னைக்கருகில் மூழ்கிய கேணல் கிட்டு பயணித்த அகத் கப்பலில் இருந்த ஒன்பது பேருக்கு எதிரான விசாரணை ஆகஸ்ட் 5ஆம் திகதிக்கு விசாகபட்டிண நீதிமன்ற நீதிபதியால் ஒத்திவைக்கப்பட்டது.

தடா சட்டத்தின் கீழ் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் இவர்கள் மீதான குற்றப்பத்திரம் ஆகஸ்ட் 5ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### பொதுஜன ஐ. மு. ஆட்சியில்

# நியமன ஜனாதிபதியாக சிறிமாவோ சந்திரிகாவிற்கு பிரதமர் பதவி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைப் பிடிக்கும் சமயத்தில் பிரதமர், மற்றும் நியமன ஜனாதிபதிப் பதவிகளை வகிக்கப் போவது யார் யாரென, பொதுஜன ஐக்கிப முன்னணி தீர்மானித்து விட்டதாக ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். பிரதமராக சந்திரிகாவும், நியமன ஜனாதிபயாக சிறிமாவும் பதவி வகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் உயர் கூட்டமொன்றிலேயே இம் முடிவுகள் தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார். அரசாங்கத்தினால் மக்கள் மத்தியில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புக்கள், பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளதாயும், இதனையடுத்தே, இப் பதவிகளுக்காக உரியவர்களை தெரியும் பணியை பொதுஜன ஐக்கிய முன்னணி முன்னெடுத்ததாகவும் விக்டர் ஐவன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, உறுதியான கருத்துக் கணிப்பொன்றின்படி, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு அறுபது சதவீத ஆதரவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு முப்பத்தேழு சதவீத ஆதரவும் உள்ளதாக தெரியவருகின்றது.

## வாகனத்திலிருந்து வீழ்ந்து இரு இளைஞர் படுகாயம்

(குருநகர்)

வாகனத்தின் கூரையில் இருந்து பிரயாணம் செய்த இரு இளைஞர்கள் வான் ‘பிறேக்’ போட்ட ஆட்டத்தினால்வீழ்ந்துபடுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

குருநகரில் இருந்து கிளாலிக்கு படகோட்டிகளாக சென்றவர்களில் இருவரே வாகனத்தில் இருந்து வீழ்ந்து படுகாயமடைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியைச் சேர்ந்த நியூட்டன் நிகால் அல்லது வின்சக்கோன் ராஜாக்குட்டி [வயது 21], கடற்கரை வீதியைச் சேர்ந்த மனோகரன் இளவழகன் [பெரியவன் வயது 23] ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (21)

## சாமியார் வேடமிட்டு ஏமாற்றும் பேர்வழிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் சாமியார் வேடம் போட்டு பொதுமக்களிடம் பணம் அபகரிக்கும் கொள்ளையர்க மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆலயத்தின் பெயரிலும் பற்றுச்சீட்டு அடித்து போலியாக விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பொதுமக்கள்

# 2000ஆம் ஆண்டில் இலங்கையில் இருநாடுகள் தவிர்க்க முடியாதது

### அமெ. ராணுவ சஞ்சிகை கூறியதாக வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

2000 ஆம் ஆண்டில் இலங்கைத்தீவில் இரு நாடுகள் இருப்பதை எவராலும் தடுக்க முடியாது என அமெரிக்காவிலிருந்து வெளியாகும் இராணுவ சஞ்சிகை ஒன்று கூறுவதாக கடற்புலிகள் அரசியல் பயிற்சிப் பொறுப்பாளர் மு. வே யோ. வாஞ்சிநாதன் கூறினார்.

கந்தரோடையில் சுப்பிரமணிய சனசமூக நிலைப 44 பற்றி உலகில் இராணுவ ஆராய்ச்சியாளர்கள் எழுதி வருகின்றனர். 1999ஆம் ஆண்டு முடிவில் இலங்கைத் தீவில் இரு நாடுகள் இருப்பதை யாராலும் தடுக்க முடியாது என இவர்கள் கூறுகின்றனர். உலகின் யுத்தங்களை நுண்ணிய முறையில் ஆராய்

### பிரபாகரனின்

நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன.

திருநெல்வேலியில் 13 இரா

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கனகு (சாம்பசிவம்) கஜபாலினி

கொட்டடி 91/11 காரைநகர் வீதியைச் சேர்ந்த செல்வி கனகு (சாம்பசிவம்) கஜபாலினி காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகு (சாம்பசிவம்) திருமதி கனகு மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புப் புதல்வியும் கஜனி, கஜநேசன், கஜநந்தினி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-07-94 பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காககோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

**கஜநேசன் (கண்ணாடி)**

(சகோதரன்)

(8927)

### வினாசித்தம்பி திருநாவுக்கரசு (நடேசு)

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மன்னன் தோட்டம் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வினாசித்தம்பி திருநாவுக்கரசு (நடேசு) 23-07-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவதர்சினி, சிவமலர், சிவசக்தி (மதி) சிவப்பிரியா, பானுமதி, கலியாணி, சிவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், பாலசிங்கம், சிவபுண்ணியம், விசுவநாதன், புன்னாலைக்கட்டுவன் திருமதி இலகுப்பிள்ளை, தங்கம்மாவின் சகோதரனும் மூத்ததம்பி, பூபதி, பூபாலன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-7-94 ஞாயிற்றுக்கிழமை(இன்று)முற்பகல்10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மூளாய் கொத்தாந்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மன்னன் தோட்டம்,
மூளாய்.
(8925)

தகவல்
**மனைவி**
**பிள்ளைகள்**

### மெல்லிசைக்கலைஞர் ஏ. ஆர். சிறிகிருஷ்ணமூர்த்தி

(யாழ். மாநகரசபை ஊழியர்)

மெல்லிசைக் கலைஞர் ஏ. ஆர் சிறிகிருஷ்ணமூர்த்தி 23-7-94 நேற்றிரவு காலமாகிவிட்டார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், தர்மசீலன் (சிறிகண்ணன் இன்டஸ்றீஸ்), குணசீலன் (சகீலா மருந்தகம்), ஜெயசீலன் (கொழும்பு), ஞானசீலன் (மாருதி வீடியோ விஷன்) மாலதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகௌரி, சகீலா, சிவயோகரன், சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் புகழுடல் 25-7-94 நாளை மாலை 2 மணிக்கு 19/1B-A தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை என்ற முகவரியிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள்

அபகரிக்கும் கொள்ளையர்களால் மக்கள் ஏமாற்றம் அடைந்து வருகின்றனர்.

மீசாலை, கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளில் ஆண்கள் இல்லாத வீடுகளில் சென்று அங்குள்ள பெண்களுக்கு சாத்திரம் சொல்லி பொய் கூறி விட்டு ஆயிரக் கணக்கில் பணத்தினை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகி வருகின்றனர். இவர்கள் அது


யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4. 00 மணி

உயிராயுதம்

தினசரி 6. 00 மணி
சனி, ஞாயிறு 10.30,
6. 00 மணி

JURASSIC PARK

(சி-9950)



## தவறுக்கு வருந்துகிறோம்

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தினரால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கம் (அறங்காவலர்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவறு எனவும் வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பச் செட்டியார் அறங்காவலர் என்பதே சரியானதாகும்.

(8926) ஸ்ரீ பாலகதிர்காமதேவஸ்தானம்



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பொதுமக்கள் பலர் பணம் கொடுத்து ஏமாந்துள்ளார்கள். (86)

## இறையியல் கருத்தரங்கு

இறைமக்கள் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு புதிய ஏற்பாடு காலத்தில் பழைய ஏற்பாட்டை கையாளும் முறைகள் எனும் பொருளில் கருத்தரங்கு இடம்பெறும்.

மருதனார்மடம் இறையியல் கல்லூரியைச் சேர்ந்த அருட்திரு ஜி. டி. ஆனந்தராஜா கருத்தரங்கு வழங்குவார்.

### மதில்

திக்கப்பட்டுள்ளளர். பெரஹராவை காண மதில்மேல் மக்கள் ஏறியிருந்த போதே இவ்விபத்து நடைபெற்றது. மதில் இடிபாடுகளுக்கிடையில், பலர் சிக்குண்டே காயமடைந்தனர்

சம்பவத்தின் போது பீதியடைந்து சிதறி ஓடிய சிலரும் நெருக்கடியில் சிக்கி காயமடைந்தனர்.

திருநெல்வேலியில் 13 இராணுவத்தினரை தாக்கியழித்த லெப். செல்லக்கிளி வீரச்சாவு தழுவிய இடத்திலும் கல்வியங்காட்டிலும் நேற்றுக்காலை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

திருநெல்வேலி தபாற்கட்டை சந்தியில் உள்ள லெப். செல்லக்கிளி நினைவாலயத்தில் கடற்புலிகள் அரசியற் துறைப் பொறுப்பாளர் மூர்த்தி உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார். இத் தாக்குதலில் பங்கேற்ற விடுதலைப் புலிகள் உறுப்பினர் அப்பையா அண்ணை ஈகச்சுடரை ஏற்றினார்.

கல்வியங்காட்டிலும் லெப். செல்லக்கிளி உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. இந் நிகழ்வுகளில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், விடுதலைப் புலிகள் உறுப்பினர் தேவர், யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு

வீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட 60கோடி ரூபா மீளப் பெறப்படாததால் ஏற்பட்ட நட்டத்தை அரசாங்கம் எப்படிச் சமாளித்துள்ளது என பத்திரிகையாளர்கள் இச்சந்திப்பின் போது வினாவெழுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்திற்கு ஐ. தே. க பொதுச்செயலாளர் காமினி விஜேயசேகரா தலைமை வகித்தது குறிப்பிடத்தக்கது முன்னர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளவசூலிப்பதில்லை என தேர்தலையொட்டி அரசு விடுத்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

கந்தரோடையில் சுப்பிரமணிய சனசமூக நிலைய 44 ஆம் ஆண்டு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

எமது விடுதலைப் போர்றனர். உலகின் யுத்தங்களை நுண்ணிய முறையில் ஆராய்ந்து வெளியிடும் அமெரிக்க சஞ்சிகை ஒன்று 2000 ஆம் ஆண்டில் இது சாத்தியமாகும் என்கிறது எனக் குறிப்பிட்டார்.

# லேக்ஹவுஸ் நிறுவனம் தனியார் வசம் வரும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அமைப்பாக இருக்கும் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம், அரசுடமையிலிருந்து விடுவிக்கப்பட்டு தனியார் துறையிடம் ஒப்படைக்கப்படும் என பொது ஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது.

அவ் விஞ்ஞாபனத்தில் லேக்ஹவுஸ் நிறுவன பங்குகள், நிறுவன ஊழியர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும், தனியாருக்கும் விற்கப்படும். எனினும் இருபது சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகள் ஒரே தாபனத்துக்கோ, தனிநபர்களுக்கோ விற்கப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மானசீக சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் தொகுப்பு மீள ஆராயப்பட்டு இரத்துச் செய்யப்படும். உரிமை மீறல் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டு தண்டனை வழங்கும் நிலை இனியும் ஏற்படாது எனவும் இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இந்நிறுவனத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசே அரச உடமை ஆக்கியது குறிப்பிடத்தக்கது.

### தோல்வியை

திபதியின் ஆலோசகர் விக்கிரம வீரசூரிய ஒத்துக் கொண்டுள்ளார்.

கருத்துக் கணிப்புக்கள் குறித்து, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

### வதந்தியால்

னர் இறக்கப்பட்டனர் என பரவிய வதந்தியை அடுத்தே இச் சம்பவம் இடம்பெற்றது

பின்னர் இத் தகவல் பொய்யானதென அறிந்து கொண்டதையடுத்து மக்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச்சென்றனர் (14)

### இழுவைப்

மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் உற்பத்தி செய்பவர்களுக்கு அறியத்தருகின்றனர்.

### எதிரணிக்கு

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிப்பவர்களுக்கு 1989/90 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றவைதான் நடக்கும் என எச்சரித்துள்ளனர் என ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை மேலும் தெரிவித்தார்.


யன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,

சி. தர்மசீலன்

(சி-9979) (கண்ணன்)



## சின்னத்துரை பாக்கியலெட்சுமி
(கண்மணி)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கே. கே, எஸ் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்துரை பாக்கியலெட்சுமி 23 - 07 - 1994 சிவபதமடைந்தார்

இவர் காலஞ்சென்ற மருதனார் செல்லமுத்து ஆகியோரின் புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரையப்பா, பொன்னம்மா மற்றும் நடராசா சிவசாமி, துரைச்சாமி ஆகியோரின் அன்பு சகோதரியும். சற்குணேஸ்வரி, காலஞ்சென்ற செல்லம்மா, மற்றும் அன்னலெட்சுமி, திருமகள், தனலெட்சுமி சசிகாந்தன் (வர்த்தகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பத்மநாதன், விசுவலிங்கம், மகேஸ்வரன், சிவபாதம், வேலாயுதபிள்ளை சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் நடராசா, ஆசப்பிள்ளை, காலஞ்சென்ற நல்லதம்பி பொன்னம்மா பாலசிங்கம் (ஊழியர் புங்குடுதீவு மகாவித்தி.) ஆகியோரின் மைத்துனியும், சுபேந்திரன் (கனடா), வாசுகி (கனடா), ரவீந்திரன் (கனடா சிவனேந்திரன் (சுவிற்சலாந்து), குகனேந்திரன் (கனடா), குணேந்திரன் (கொழும்பு), சுபானந்தி, சுபதர்சினி, கமலேஸ்வரி, அனுரா, புஸ்பவதனி, சுமதி, சுதர்சன், ஜீவராணி, நிரோஜா, பார்த்தீபன், சாரதா, லோகதாரணி, கிஷானந், சுஜீவன் (கனடா) ரஜிவன், சத்தியமாலா, சசிமாலா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 24-07-94 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3-00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்

424, கே. கே. எஸ். றோட், தகவல்:
(பண்டிக்கோட்டு, சி. சசிகாந்தன்
பிள்ளையார் கோவில் முன்பாக) (மகன்)
யாழ்ப்பாணம். (8928)